# ரெட்டி மலர்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| மலர் : XVII | இதழ் : 11 | பிப்ரவரி 2024 | விலை. ரூ.15/– |
|---|---|---|---|
| Vol. : XVII | Issue No : 11 | FEBRUARY 2024 | Price. Rs.15/ |


## ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாளில் முப்பெரும் விழா




## சென்னை மண்டலத்தின் சார்பில் ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாள் விழா



உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

HJ ஹரிணி ஜுவல்லர்ஸ்



தங்கநகை சேமிப்புத் திட்டத்தில்
செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2
Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVII பிப்ரவரி & மார்ச் 2024 இதழ் : 11, 12



வெளியீட்டாளர் : V. செல்வராஜூ

ஆசிரியர் : R. இராஜசேகரன்

கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்

இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்

துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்

சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப்பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப்பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜூ
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப்பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப்பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகையா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-8
- ஓ.பிஆர் பிறந்தநாளில் முப்பெரும் விழா - 9-18
- சென்னை மண்டலத்தின் சார்பில் ஓ.பி.ஆர் 129வத பிறந்தநாள் விழா - 19-20
- ஓமந்தூரில் ஓ.பி.ஆர் பிறந்தநாள் விழா - 21-22
- திருச்சியில் P.ஜெய்பிரகாஷ் அவர்களின் 4 நூல்கள் வெளியீடு - 23
- மாநிலத் தலைவர் அறிக்கை & திருச்சி ரெட்டி நல சங்கம் நடத்திய ஓ.பி.ஆர் பிறந்தநாள் விழா - 24
- திரு.G.V.மார்க்கண்டேயன் MLA அவர்களுக்கு இயற்கை பாதுகாவலர் விருது - 25
- துறையூர் ரெட்டி நல சங்க மகளிர் அணி சார்பில் மகளிர் தினவிழா - 26
- பெரம்பலூர் ரெட்டி நல சங்க மகளிர் அணி சார்பில் மகளிர் தினவிழா - 27
- திருவண்ணாமலை ரெட்டி நலச் சங்கம் சார்பில் ஓ.பி.ஆர் பிறந்தநாள் விழா - 28
- கவிராயர் அண்ணாமலை ரெட்டியார் 133வது நினைவு தின நிகழ்ச்சி - 29
- விளம்பரம் - 30
- திருமணத் தகவல்கள் - 31-34


உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் நேசிக்க வேண்டும். கிடைத்ததை நெஞ்சார நேசிக்க வேண்டும். நம்பிக்கையோடு வளர்ச்சியை எதிர்கொள்ள வேண்டும். இவை தான் உங்களுக்கு நான் தரும் வாழ்க்கைப் பாடம்.


## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# அதிர்ச்சி தரும் ஆராய்ச்சி முடிவுகள்

**தலையங்கம்**

தொலைக்காட்சிப்பெட்டிகள் வீடுகள் தோறும் வருவதற்கு முன்பாக மக்களுக்கான பொழுதுபோக்கு என்பது பத்திரிக்கைகள், புத்தகங்கள் வாசித்தல், வானொலி கேட்டல் அடுத்து திரைப்படங்கள் பார்த்தல் போன்றவை. நன்கு பிடித்த பாடல் காட்சிகளை, நகைச்சுவைகளை மீண்டும் பார்க்க வேண்டும் என்றால் மீண்டும் திரையரங்கம் சென்று காசு செலவழித்து பார்க்க வேண்டும். தொலைக்காட்சி பெட்டி வந்தவுடன் அனைத்தும் மாறிவிட்டன. சாட்டிலைட் சேனல்கள் பெருக, பெருக வீட்டுக்குள் மட்டுமல்ல மனிதனுக்குள்ளும் பெரும் மாற்றம் நிகழ்ந்து வருகிறது. அச்சு ஊடகம் அழிந்தது. வானொலி கேட்கும் பழக்கம் குறைந்தது, மாலை வேளைகளில் வேலை முடிந்தபின் பொழுது போக்கிய காலம் போய் 24 மணி நேரமும் நம் வீட்டின் ஒரு அங்கத்தினராய் மாறிப்போனது தொலைக்காட்சி. இப்போது வரும் சீரியல்கள் மனநோயாளிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

டிவி நாடகங்களில் வரும் அழுகைகள், ஒப்பாரிகள், உரக்க கத்திப்பேசுதல், சோக இசைகள், சாவு மேள இசைகள் இவையெல்லாம் நம் வீட்டில் இருக்கும் லக்ஷ்மிகடாக்ஷத்தை சீர்குலைத்துவிடும். இப்படி அபசகுனமான காட்சிகள் டிவியில் நடந்தாலும் அதன் ஒளி, ஒலி அதிர்வுகளின் நிகழ்வுகள் நமது வீட்டுக்குள்ளேயே நடப்பதால், குடும்பத்தில் பல பிரச்சனைகள் உருவாகும் என்பது ஆன்மீக நம்பிக்கையாளர்களின் ஆய்வு தெரிவிக்கிறது. 'இதனால் நோய்கள் பல வரலாம். வீட்டில் செல்வம் தங்காமல் போகலாம், வீண் செலவுகள் ஏற்படலாம், தொழிலில் நஷ்டம் ஏற்படலாம்' என்றவாறு ஆன்மீக நம்பிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவுகள் எச்சரிக்கை செய்கின்றன. அதேநேரம் ஆன்மீக நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் இந்த மருத்துவ ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி அளிப்பதாகவும் அபாய–கரமானதாகவும் உள்ளது.

ஆம், இவை நம் உடல்நலத்தை சீரழித்து விடும். கண்பார்வை கோளாறில் தொடங்கி மன இறுக்கம், மன அழுத்தம் போன்ற மனநோய்களுடன் உடல் எடை அதிகரித்து, இதன் தொடர்ச்சியாக சர்க்கரை நோய், மாரடைப்பு, இதயக்கோளாறு, உயர் ரத்த அழுத்தம், கழுத்து எலும்பு தேய்மானம், தலைசுற்றல், தலைவலி, மூளை மற்றும் நரம்பியல் தொடர்பான பிரச்சனைகள் ஏற்படும்.

தொலைக்காட்சித் தொடர்களில் பிறரை எப்படி கெடுப்பது, அழிப்பது, துன்புறுத்துவது, கணவன் மனைவிக்குள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி கள்ளக் காதல் தொடர்பு கொள்வது எப்படி என்று கற்றுக் கொடுக்கப்படுகிறது. குடும்பத்துக்குள் மாமியார், மருமகள் சண்டை, அண்ணன் தம்பி சண்டை, சந்தேகப்படுவது, குடும்பத்தினரைப்பிரிக்கும் சூழ்ச்சி என பல தவறான விஷயங்களையெல்லாம் கற்றுத் தருகிறது. எப்படி லஞ்சம் பெறுவது என்று கற்றுக் கொள்ளலாம், மேலும் நேர்மையான அரசு அதிகாரிகளை எப்படி லஞ்சம் வாங்கியது போல் திட்டமிட்டு மாட்டிவிடுவது என்று கற்றுக் கொடுக்கப்படுகிறது. பிறர் தொழிலை எப்படி கெடுப்பது, எப்படி நம்பிக்கை துரோகம் செய்வது போன்ற தவறான விஷயங்கள் எல்லாம் மக்களுக்கு கற்றுத்தருகிறது.

குடிபோதை, வன்முறை போன்ற சகல ஒழுக்கக் கேடுகளையும் வீட்டுக்குள் தொலைக்காட்சி காட்சிப் படுத்திக்கொண்டேயிருக்கிறது. காட்சி ஊடகங்களின் வழியே பிள்ளைகளுக்கு எளிதாக இவையெல்லாம் அறிமுகமாவதோடு அதுதான் கொண்டாட்டம், சாகசம் என்கிற மனநிலையையும் உருவாக்கி விடுகிறது. இதனால் நம் அருமைக்குழந்தைகளின் விலை மதிப்பற்ற எதிர்காலத்தை சீரழிக்கிறது. இத்தனை பாதிப்புகள் தெரிந்தும், டி.வி. நிறுவனங்கள் தங்கள் டி.ஆர்.பி. ரேட்டிங்கை அதிகரிக்க, சுயலாபத்துக்காக மக்களைச்சீரழிக்கும் டிவி சீரியல்களைத் தயாரிக்க முக்கியத்துவம் தருகின்றன. எனவே, தயவுசெய்து இதுபோன்ற கேவலமான நாடகங்களைப் புறக்கணியுங்கள். நாம் புறக்கணித்தால், டி.ஆர்.பி. ரேட்டிங் தானாகவே குறைந்தால், மக்களை சீரழிக்கும் சீரியல்களைத் தயாரிப்பதை அவை தாமே நிறுத்தி விடும்.

நம் வாழ்விற்கான நல்ல தேடல்கள் குறைந்து வருகிறது. யோசிப்பதற்கான, திட்டமிடுதலுக்கான நேரத்தை தொலைக்காட்சிகள் விழுங்கி விடுவதால் நம் இலக்கை, நம் இலட்சியத்தை அடைவதில் சோர்வும் ஏற்படுகிறது. ஒரே வரியில் சொல்வதெனில் மூளை மழுங்கி விடும்.

ஆதவன் உதிக்கும் முன்னே வயலுக்குச் சென்று கடினமாக உழைத்து ஏர் பூட்டாத மாடாய் மனிதன் உழைத்து, ஆதவன் மறைந்த பிறகு வீடு திரும்புபவனுக்கு அன்று தெருக்கூத்து ஒரு வரப்பிரசாதம். தெருக்கூத்தில் இடம்பெறும் நாயகர்கள் தாங்களென்று எண்ணி பொழுதைக் கழிப்பார்கள். இன்று மாடாய் உழைக்கவில்லை, ஆனாலும் மனரீதியாக அனைவரும் சோர்வடைந்து காலம் கழிக்கின்றனர். பார்ப்பவைகளை எல்லாம், தன்னோடு ஒப்பிட்டுப்பார்த்து காலம் கழிக்கின்றனர். அதனால் தான் தொலைக்காட்சிகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம். பொழுதை வீணடிப்பதைத் தவிர மற்றபடி வேறெதுவும் நன்மைகள் இல்லை.

எனவே, தொலைக்காட்சிகளில் மூழ்கியிருப்பதை தவிர்க்க முதலில் சீரியல்கள் காண்பதை நிறுத்த வேண்டும். தொடர்கள் குறித்த செய்திகளில் நாட்டம் இல்லாது பிற செயல்களில் பொழுதை பயனுள்ளதாக மாற்றலாம். உதாரணமாக தொடர் ஒளிப்பரப்பாகும் நேரங்களில் வீதி உலா வரலாம். இது உடற்பயிற்சியாகவும் அமையும். அல்லது நண்பர்களை சந்திக்கலாம். உங்கள் விலை மதிப்பில்லா ஓய்வுநேரத்தை, அன்பான குழந்தைகள், வீட்டில் உள்ள இணை, பெரியவர்கள் இவர்களுடன் சிரித்து, பேசி பாசத்துடன் பழகி வாழ்க்கையை அனுபவியுங்கள். குறைவான நேரமே நல்ல நிகழ்ச்சிகளைப்பாருங்கள். மற்ற நேரங்களில் நல்ல புத்தகங்களைப் படியுங்கள். கிடைக்கும் பொன்னான நேரங்களில் பிறருக்கு நன்மை செய்யும் நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். இல்லையேல் வரும் பலன்களை, நல்லதோ, கெட்டதோ அவற்றை நீங்கள் தான் டிவி பார்த்து உருவாக்கினீர்கள் என்பதை உணர்ந்து அனுபவிக்கத்தயாராக வேண்டும். காலம் கடந்து உணர்வதால் பலனில்லை.

அல்லதை விடுத்து நல்லதைப் பாருங்கள்; கேளுங்கள், பேசுங்கள், சிந்தியுங்கள்; வாழ்வில் எல்லாம் நல்லதாய் நடக்கும். தீதும் நன்றும் பிறர் தர வாரா! நம்மைச் சுற்றி நடப்பனவற்றுக்கு நாமே பொறுப்பு!

R. இராஜசேகரன் ஆசிரியர்



# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in


## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**'எ**ந்த ஒரு சமுதாயம் தனது முன்னோர்களையும், அவர்களது பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் திரும்பிப் பார்க்கவோ, கடைப்பிடிக்கவோ மறக்கிறதோ, அந்த சமுதாயத்தை அழிக்க வெளியில் இருந்து ஒருவர் வரவேண்டியதில்லை. அது காலப்போக்கில் தானே அழியும்' என்றார் விவேகானந்தர்.

**நா**ம் விவேகானந்தரின் பொன்மொழியினை தாரகமந்திரமாக கொண்டு, நம் முன்னோர்கள் கடைப்பிடித்த பாரம்பரிய பண்புகளான விருந்தோம்பல், விட்டுக்கொடுத்தல், பிறருக்கு உதவும் தயாளகுணம் போன்ற நற்குணங்களுடன் நம் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் ஒற்றுமையுடன் கடைப்பிடித்தால் கடந்த காலம் போலவே சிறந்த சமுதாயமாக மாறும்.

**ந**ம் முன்னோடித் தலைவர்கள் நம் சமுதாய வளர்ச்சிக்காகவும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் வைத்த கோரிக்கைகளை வென்றெடுக்க பாடுபடுவது நம் அனைவரின் கடமை. அதற்கு முக்கியத்துவம் வாய்ந்த பொது விஷயங்களில் நாம் கவனம் செலுத்துவதும் அவசியம்.

**நா**டாளுமன்ற தேர்தல் தமிழகத்தில் வரும் ஏப்ரல் 19 அன்று நடைபெற இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் வாக்களிப்பது நம் அடிப்படை கடமையும், உரிமையுமாகும். வாக்கு செலுத்துவதற்கு முன் நம்மை சுற்றி நடக்கும் சமூக அரசியல் சூழல்களை புரிந்துக் கொண்டு நம் சமுதாய நலனுக்கும், தமிழக நலனுக்கும், தேசநலனுக்கும் ஏற்ற ஒரு அரசாங்கம் அமையும் வகையில் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பு இருக்க வேண்டும். குறிப்பாக,

- நம் ரெட்டியார் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனையான ரெட்டி கஞ்சம் சான்று பெறுவதில் உள்ள சிக்கல்களை களைவது,
- ரெட்டி கஞ்சம் பிரிவை மத்திய அரசின் இதர பிற்படுத்தப்பட்டோர் (OBC) பட்டியலில் சேர்க்க வலியுறுத்துவது,
- 2019ம் ஆண்டு மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதி ஏழைகளுக்கான 10% இடஒதுக்கீட்டை தமிழகத்தில் அமல்படுத்த செய்வது, அதற்குண்டான EWS சான்றுகளை (EWS Certificate) தடையின்றி வழங்கிட வழிவகை செய்வது,
- தெலுங்கு மொழி இனத்தவர் என்ற இனச்சான்றிதழை அனைவரும் எளிதில் பெறும் வகையில் எளிதாக்குவது,

உள்ளிட்ட முக்கிய வாழ்வாதார பிரச்சனைகளில் தீர்வு ஏற்படவேண்டும் என்பதே நம் அனைவரின் அவா.

பிற சமுதாயங்களுடன் ஒப்பிடுகையில் கல்வி, வேலைவாய்ப்பினை பெறுவதில் நம் சமுதாயம் பின்தங்கியுள்ளது. மேலும் நாம் பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியிலான செல்வாக்கினையும் படிப்படியாக இழந்து வருகிறோம். இதன் விளைவாக பிற சமுதாயங்கள் நம் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகியுள்ளது.


**இ**தனை சரிசெய்ய நம் குரலை ஒற்றுமையாக எழுப்பி, நம் வலிமையை காட்டும் வகையில் மாநில அளவில் ஒன்றிணைந்து நாடாளுமன்ற தொகுதிவாரியாக அரசியல் தலைவர்களிடமும், வேட்பாளர்களிடமும் கோரிக்கைகளை வைக்கவேண்டும். அடுத்து, கீழ்க்கண்ட நியமனப்பதவிகளில் வாக்கு வங்கியை மட்டுமே கணக்கில் கொண்டு ஆளும் அரசாங்கங்கள் ஒதுக்கீடு செய்து வருகின்றன. இதனை போக்க நம் சமூகத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும்.

- தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் நியமன உறுப்பினர் பதவி,
- சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தில் உறுப்பினர் பதவி,
- பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனப்பதவி,
- நம் சமுதாயத்தைச்சேர்ந்த தகுதி வாய்ந்த வழக்கறிஞர்களுக்கு நீதிமன்றங்களில் இடமளிக்க பரிந்துரைப்பது

என்பன போன்ற நியமனப்பதவிகளில் நம் கோரிக்கைகளுக்கு யார் ஆதரவு அளிக்கிறார்களோ அவர்களுக்கு வாக்களித்து அதன் மூலம் நம் முன்னோடி தலைவர்கள் வைத்த கோரிக்கைகளை வென்றெடுக்கவேண்டும். நம் வாக்குகளை வீணடிக்காமல் சமூகத்திற்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் நபரை தேர்ந்தெடுப்போம். அரசியல் கண்ணோட்டத்தோடு யாரையும் பார்க்காமல் நாம் அனைவரும் சமுதாய உணர்வோடு இருப்போம். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்போம்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**V. செல்வராஜ்**



கிருபானந்த வாரியார் சுவாமிகள் வடலூர் சத்திய ஞான சபைத் திருப் பணியைச்செய்து முடித்தபோது அவ் விழாவிற்காக ஓமந்தூரார் பல நாட்கள் தங்கினார். அப்போது தான் குருகுலம் ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வந்தார். வள்ளலார் வாழ்ந்த வடலூரில் சான்றோர் பலரும் வாழவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

நாம் இங்கே தங்கினால் தானே மற றவர்களையும் இவ்வூரில் இருக்கும்படி கேட்டுக் கொள்ளலாம் என்று கருதினார்.

கிருபானந்த வாரியார் செய்த திருப்பணி நிறைவு விழாவுக்கு ஓராண்டு முன்னதாக, சுவாமி சுத்தானந்த பாரதியார் புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறி விடுவதென்று முடிவு செய்திருந்தார். அந்த முடிவு சுத்தானந்த பாரதியாருக்கும், சென்னியப்பமுதலியாருக்கும் மட்டுமே தெரிந்த இரகசிய முடிவாக இருந்தது. சுத்தானந்த பாரதியார் தன்னுடைய பல்லாண்டு மௌனத்தைக்கலைத்து மீண்டும் பேசலானார். அதை முன்னிட்டு திரு.சென்னியப்ப முதலியார் புதுச்சேரியில் ஒரு பெரிய விழா நடத்தி, அதற்கு ஓமந்தூராரைத் தலைமை தாங்கும்படி அழைத்திருந்தார். ஓமந்தூரார் பல ஆண்டுகளுக்கு முன்னரே சுத்தானந்தரின் நூல்களைப் படித்திருக்கிறார். இவர் துறவியாகவும், ஏற் கெனவே உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராக இருந்து அனுபவம் உள்ளவராகவும் இருப்பதை முன்னிட்டு, சுவாமி சுத்தானந்தர் வடலூரில் தங்க வேண்டுமென்றும், குருகுலத்தை நடத்த அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் ஓமந்தூரார் நினைத்தார்.

ஒரு கூட்டை விட்டு வெளியேறிய சுத்தானந்த பாரதியார் மற்றொரு கூடு தேடும் பறவையாக இருந்த சமயம். அது காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாக இருந்தது.

### அரசியலுக்கு முழுக்கு

1920 முதல் 1949 வரை ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் தீவிரமான அரசியல்வாதியாக இருந்த ஓமந்தூரார் இப்போது அரசியலிலிருந்து விலகிக் கொள்ள முடிவு செய்தார்.

சாதாரணமாக எந்த அரசியல்வாதியும் (மரணம் அவர்களை விலக்கி வைத்தால் அன்றி) அரசியலிலிருந்து விலகுவதில்லை. ஒரு சில சுயநல அரசியல் தலைவர்கள், நெருக்கடியான காலங்களில் ஒதுங்கி மதில் மேல் பூனையாக இருந்து திடீரென்று குதித்து மீண்டும் பதவியைக் கைப்பற்றுவார்கள்.

அரசியலை விட்டு வெளியேறிய பிறகு, மீண்டும் அரசியலில் நுழைய ஓமந்தூரார் விரும்பவில்லை. எக்காரணத்தைக் கொண்டும் அவர் இந்த முடிவிலிருந்து சற்றும் பிறழ வில்லை. சமய, சமுதாயத்தொண்டில் ஈடுபடுவ தென்றும், அதற்கு உரிய இடம் வடலூரே என்றும் முடிவு செய்தார்.

### அன்றைய வடலூர்

ஓ.பி.ஆர். வடலூரில் வந்து தங்கிய 1951ல் இந்த ஊர் எப்படி இருந்தது என்பதை இன்று நினைத்துப் பார்க்கவும் இயலவில்லை. அடுத்த முப்பது ஆண்டு களில் அத்துனை மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன.

1959ல் தான் நெய்வேலித் திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதற்கு முன், நெய்வேலியில் ஏதோ சில சோதனைகள் மட்டும் அதுவும் சின்னஞ்சிறு அளவில் நடந்து கொண்டிருந்தன. நெய்வேலித் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதுகூட ஒரு கேள்விக்குறியாக இருந்தது.

அப்போது வடலூரில் எவ்விதமான தொழில் கூடமும் கிடையாது. சாப்பிடுவதற்கு ஓட்டல் இல்லை. மின்சார வசதி கிடையாது. வங்கி கிடையாது. தந்தி நிலையம் கிடையாது. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

- ★ சத்திய ஞானசபை
- ★ தர்மசாலை
- ★ நான்கைந்து சத்திரங்கள்
- ★ சில சாதுக்கள் இவ்வளவு தான்.

சின்னஞ்சிறு பொருள் வாங்குவதற்குக் கூட குறிஞ்சிப்பாடிக்குத் தான் போகவேண்டும் வடலூர் இரயில் நிலையத்தை மூடிவிடவும் இரயில் நிர்வாகத்தினர் யோசனை செய்து வந்தனர் என்கிறார் அருள் திருவாட்டி சாந்தலெட்சுமி அம்மையார். அம்மையார் மேலும் சொல்லுவதாவது,

“நான் வடலூருக்கு வருவதற்குச்சில மாதங்கள் முன்னர் ஓ.பி.ஆர் இங்கு வந்தார்கள்”.

அந்தக் காலத்தில் வடலூர் வருவோர் ஒரு நாள் தங்குவதற்குக் கூட வசதி இல்லை. பேச்சுத் துணைக்குத் தகுந்த ஆள் கிடைக்காது.

கட்டடம் கட்ட ஒரு சாமானும் இங்கு கிடைக்காது. கொத்தனாரைக் குறிஞ்சிப்பாடியி லிருந்து வரவழைக்க வேண்டும். கல், மண், சிமெண்ட், கூலி ஆள் எல்லாம் வெளியூரிலிருந்து தான் வரவேண்டும். இந்தச் சூழ்நிலையில் ஓ.பி.ஆர் எவ்வளவோ இன்னல்களுக்கு இடையில், இந்த அமைப்புகளை உருவாக்கினார்.

சிலசமயம் ஓ.பி.ஆருக்கே மனக்குழப்பம் ஏற் பட்டு விடும். உடனே புறப்பட்டு வா என்று ஒரு வரியில் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களுக்கு அஞ்சலட்டை எழுதுவார். அவர் திருச்சியிலிருந்து வடலூருக்கு விரைந்து வந்து, தக்க ஆலோசனை கூறி தேவையான உதவி களைச் செய்வார். ‘வரித்தொல்லை’, ‘நிலத்தகராறு’, மின்சாரத்துறையின் இடையூறு ஆகியவை சரி செய்யப்பட்டன என்கிறார் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம்.

### ஓ.பி.ஆர் தொடங்கிய நிறுவனங்கள்

ஓ.பி.ஆர் வடலூரில் பின்வரும் நிறுவனங் களைத் தொடங்கினார்.

1. சுத்த சன்மார்க்க நிலையம்
2. வள்ளலார் குருகுலம் உயர்நிலைப்பள்ளி
3. அப்பர் சான்றோர் இல்லம்
4. அப்பர் அனாதை ஏழை மாணவர் இல்லம்
5. இராமலிங்கர் தொண்டர் இல்லம்

**சுத்த சன்மார்க்க நிலையம்**

18.06.1951ல் இச்சங்கம் பதிவு செய்யப்பெற்றது. இச்சங்கத்தின் நோக்கங்கள் இவை என்று அப்போதே ஓர் அறிக்கை அச்சிடப்பட்டது. அது பின்வருமாறு,

**சங்க நோக்கங்கள்**

1. இந்த நிலையத்தை வடலூருக்கண்மையில் நிறுவ வேண்டும்.
2. அங்கு சன்மார்க்க சேவை செய்ய பயிற்சி அளிப்பதோடு ஒரு சிறந்த குருகுலமும் ஏற் படுத்தவேண்டும். சன்மார்க்க சாதகர்களுக்குத் தன்னலமற்ற சேவா மார்க்கம், பக்தி மார்க்கம், ஜீவகாருண்யத்தொண்டு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவேண்டும்.
3. இந்நிலைய அங்கத்தினர்களும் இந்நிலையத்தில் தங்கியிருப்போரும் அருட்பா, கீதை, தேவாரம், திருக்குறள், திருவாசகம் திவ்யப் பிரபந்தம், உபநிஷத்துக்கள், பாரதசக்தி, யோக சித்தி, பைபிள், மகாத்மா காந்தியின் அருள் வாக்குகள் முதலியவற்றின் போதனை–களைப் பின்பற்றி ஒழுகுவர்.
4. ஜாதிபேதமின்றி அனைவரும் பிரார்த்தனை செய்யவும், பஜனை, சொற்பொழிவுகள் முதலியவை நடத்தவும் ஒரு தியான மண்டபம் கட்டப்படும்.
5. இது சாதகர்களால் நடத்தப்படும் விவசாயப் பண்ணை ஒன்றைக்கொண்டு சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும். அனைவரும் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும்.
6. ஒரு இயற்கை ஆரோக்ய ஸ்தலம் ஏற்படுத்தி மக்கள் எப்படி தமக்குத்தாமே வைத்யர்களாக இருந்து ஆரோக்யமாக வாழ்வதென்பது போதிக்கப்படும்.
7. இங்கு யோகமார்க்கத்திலும், கலைகளிலும், விஞ்ஞானத்திலும் பயிற்சி அளிக்கப்பட்ட சாதகர்கள் சுத்த சன்மார்க்க நற்போதகர் களாகக் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் அனுப்பப்படுவார்கள்.
8. தமிழ்நாட்டுத் தீர்க்கதரிசிகளின் பாடல்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை உலக முழுமைக்கும் எடுத்துக்காட்ட தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகள் நடத்தப்பட வேண்டும்.
9. வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், யோகி சுத்தானந்த பாரதியார் இவர்களது அருமையான எழுத்துக்களை பத்திரமாக சேகரித்து அச்சிட்டு வெளியிடுவதோடு அதற்கென ஒரு அச்சகம் ஏற் படுத்தவும் வேண்டும்.
10. இந்நிலைய அங்கத்தினர்கள் பிறருக்கு உபகாரம் செய்யவும், வறுமை, அறியாமை, நோய், அடிமைத்தனம் முதலிய பிரச்சனை களைத் தீர்க்கவும் முன்வருவார்கள். இத்துடன் பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் முதலியவற் றிலும் ஈடுபடுவார்கள்.
11. இந்நிலையம் திக்கற்றவர்களுக்கும், அனாதை–தகளுக்கும் ஒரு இல்லம் அமைத்து அவர்களுக்கு வேலை, உணவு, கல்வி முதலியவற்றை நல்கும்.
12. காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித்திட்டம் இந்நிலையத்தின் குருகுலத்தில் மேற் கொள்ளப்படும். இக்கல்வி விவசாயம், குடிசைத்தொழில் முதலியவற்றின் மூலம் போதிக்கப்படும். இங்கு தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் முதலியவைகளும் போதிக்கப்படும்.
13. விவசாயம், தோட்டவேலை, கால்நடை வளர்த்தல், நூற்றல், நெய்தல், தைத்தல், சுன்னாரவேலை, தச்சு வேலை, கொல்லர் வேலை, விவசாயக்கருவிகள் செய்தல், தோல் பதனிடுதல், விஞ்ஞானத்தை அடிப்படை யாகக்கொண்ட இதர குடிசைத் தொழில்கள் முதலியவை குருகுலத்தில் கற்பிக்கப்படும். விஞ்ஞான ஆராய்ச்சிக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும். அனைவருக்கும் சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ளும் இலட்சியத்தை வற் புறுத்திக்கிராமப் புனருத்தாரணத்தை நடைமுறை யில் கொண்டுவர முயற்சி செய்யப்படும்.
14. நமது முயற்சிகளின் முக்கியமான நோக்கம் சாந்தி நிகேதன், காங்கிரி, தயாள்பாக், வார்தா இவற்றைப் போன்ற மேன்மையான உபயோக முள்ள ஒரு நிலையம் உருவாக்குவதே.
15. மனித சமூகத்திற்கு கடவுள் பிதா ஆவார். மானிடர்கள் அவரது அருட்குழந்தைகளாவர். இங்கு எப்பொழுதும் எவ்விதமான இனபாகு பாடோ–ஜாதிமத வேறுபாடோ காட்டப்படாது. நாம் இங்கு இராமலிங்கரின் சமரச போதனை–யைப்பின்பற்றுவோம். ஆத்ம நேசமும் ஆத்ம சமத்துவமுமே நமது முக்கிய குறிக்கோளாகும்.
16. இப்பெரும் கோட்பாடுகளை நிறைவேற்றப் பணி–புரிய யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஒத்து கொண்டிருப்பதால் அவர்களை நமது தலை–லவராக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

சங்க அலுவல்களின் பொறுப்பை ஏற்று நடத்தும் நிர்வாகக்கமிட்டியினரின் பெயர்களும், தொழில்களும், விலாசமும் கீழே தரப்பட்டிருக் கின்றன.

1. தலைவர் : சுத்தானந்த பாரதியார், புதுயுக நிலையம், புதுவை
2. உப தலைவர் : ஓ.பி.இராமசாமி ரெட்டியார் மிராசுதார், ஓமந்தூர், வழி திண்டிவனம்
3. உப தலைவர் : ஜி.வாகீசம் பிள்ளை, மிராசுதார், பின்னலூர், பின்னலூர் போஸ்டு
4. உதவிக்காரியதரிசி : எம்.சின்னசாமி ரெட்டி யார், மிராசுதார், திருவெண்ணைநல்லூர்
5. நிதியாளர் : ஓ.பி.இராமசாமி ரெட்டியார், மிராசுதார், ஓமந்தூர்.

**அங்கத்தினர்கள் :**

6. சச்சிதானந்தம் பிள்ளை, ரிஜிஸ்டிரார், அண்ணாமலை யுனிவர்சிடி, சிதம்பரம்

7. திரு.சென்னியப்ப முதலியார், "பாரதி மில்ஸ்" சொந்தக்காரர், புதுவை
8. திருமுருக கிருபானந்தவாரியார், ஆசிரியர்– திருப்புகழ் அமிர்தம்–சிந்தாதிரிப்பேட்டை, சென்னை
9. திரு.பி.நாராயணசாமி நாயுடு, டிரஸ்டி, "தெய்வ நிலையக்கழகங்கள்" வடலூர், உய்யக்கொண்டராவி.

**சந்தா முதலிய கட்டண விபரம்**

1. ரூ.4000ம் அதற்கு மேலும் ஒரே தடவையிலோ (அ) 4 வருடத்திற்குள்ளோ செலுத்துபவர்கள் போஷகர்கள் ஆவர்.
2. ரூ.1000ம் அதற்கு மேல் 4000க்குள்ளும் ஒரே தடவையிலோ (அ) மூன்று வருடத்திற் குள்ளோ செலுத்துபவர்கள் உபபோஷகர்கள் ஆவர்.
3. ரூ .500 செலுத்துபவர்கள் ஜீவிய அங்கத்தினர்கள் ஆவர்.
4. ஆண்டு சந்தா ரூ.12ம், சேர்க்கை கட்டணம் ரூ.1ம் செலுத்துபவர் சாதாரண அங்கத்தினர் ஆவர்.

**விவசாயப் பண்ணை**

சுத்த சன்மார்க்க நிலையத்திற்காக அன்பர்களிட மிருந்து ரூ.50,000 வரை நன்கொடை கிடைத்தது. பல அன்பர்கள், நன்கொடையாக வழங்கிய நிலமும் அரசாங்கத்தினர் வழங்கிய தரிசு நிலமும் ஓமந்தூரார் விலைக்கு வாங்கிய நிலமுமாக வடலூர் பகுதியில் 300 ஏக்கர் நிலம் கிடைத்தது. கரம்பாய்க் கிடந்த இந்தக்காடுகளைப் பயன்படுத்தும் கடுமையான பணியில் முதுமை வயதில் ஓமந்தூரார் முழு மூச்சாக முனைந்தார். 450 அடி, 500 அடி ஆழம் துளைத்துக் குழாய் இறக்கி, அதைச் சுற் றிலும் பெரிய கிணறு வெட்டி, எண்ணெயில் இயங்கும் இயந்திரங்களை வைத்து நீர்பாசனவசதி செய்து மா, பலா, கொய்யா, நெல்லி, சாத்துக்குடி, எலுமிச்சை முதலிய பழச்செடிகளை 20 ஏக்கரில் உண்டாக்கினார்.

சேப்பாநத்தத்தில் 144.80 ஏக்கரும், மனகதியில் 111.49 ஏக்கருமாக மொத்தம் 256.29 ஏக்கர் தரிசு நிலத்தை ஓமந்தூரார் சென்னை அரசாங்கத்திட மிருந்து திரு.குமாரசாமி ராஜா காலத்தில் சுத்த சன்மார்க்க நிலையத்துக்காகப் பெற்றார். இது தவிர 14.98 ஏக்கரை ஏலத்தில் வாங்கினார்.

தரிசு நிலங்களே ஆயினும் ஓ.பி.ஆர் தொட்டதெல்லாம் துலங்க, பட்டதெல்லாம் பரிமளிக்க வடலூரில் வாழ்ந்து, இந்த நிலங்களைத் தம் உழைப்பால் வளப்படுத்தி, பொன் கொழிக்கும் பூமியாக்கினார்.

"அறம் பழுக்கும் தருவே யென்குருவே யென்றன்

ஆருயிர்க் கொரு துணையே யரசே பூவை

நிறம் பழுக்க அழகொழுகும் வடிவக்குன்றே

என்று வடலூர் வள்ளலார் இராமனைப் பாடிப் பரவுவார். அந்த இராமன் பெயர் தாங்கிய ஓ.பி.ஆர் வடலூருக்கு வந்தது, வடலூரின் பேறு என்று தான் சொல்லவேண்டும்.

வடலூரிலும், சுற்றுப்புறத்திலும் உள்ள விவசாயிகளுக்கு உபயோகமாக குழாய் கிணறுகள் பல அமைக்க அரசாங்கத்தில் ஏற்பாடு செய்தது ஓ.பி.ஆரின் பெரிய சாதனை எனலாம். இதனால் இப்பகுதி நிலங்கள் வளமாக இருப்பதை இன்றும் காணலாம்.

விவசாயிகள் எவ்வாறு நிலங்களைக் கவனிக்க வேண்டும் என்பதற்கு ஓ.பி.ஆர் வழிகாட்டியாக விளங்கினார். மழையாயினும் வெயிலாயினும் நாள் தோறும் இந்த முன்னாள் முதலமைச்சர் தாம் நட்ட செடிகள் அனைத்தையும் நேரடியாகப் பார்த்து– ஒவ்வொரு மரக் கன்றாகவும் செடியாகவும் பார்த்து –அவற்றின் குறை என்ன, தேவை என்ன என்பதை அறிந்து, தண்ணீர் ஊற்ற வேண்டுமானால் ஊற்றச் செய்து உரம் போட வேண்டுமானால் போடச் செய்து, வேலி அடைப்பு தேவையானால் அடைத்து அதன் பிறகு குருகுலத்துக்குத் திரும்புவார். இலை தழைகள் கூட கீழே உதிர்ந்து விடச் சம்மதிக்க மாட்டார்.

முந்திரி செடிகளைத் தாமே நடுவார். யாழ்ப்பாணத்திலிருந்து பனங்கொட்டைகள் வரவழைத்துப் பனை மரம் பயிரிட்டார்.

அமைதியை விட மேலான ஆனந்தம் வேறு எதுவும் இல்லை. உண்மையான அறிவின் மூலம் மன விடுதலை பெற்றவனுக்கு, மனத்திலும் அமைதி இருக்கும், செயலிலும் அமைதி இருக்கும் என்றார் புத்தர். இந்த அமைதியையும் மகிழ்ச் சியையும், மரம், செடி கொடிகளை நட்ட போதும் அவற்றைப் பேணிய போதுமே ஓ.பி.ஆர் அடைந்தார்.

வறட்சிக்குப் புகழ்பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி முதல் இராமேசுவரம் வரை இரயில் பயணம் செய்தார் ஓ.பி.ஆர். இந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் புளிய மரங்களையாவது வைக்கலாமே என்றார்.

**வள்ளலார் குருகுலம்**

1953 செப்டம்பர் 28, விஜயதசமி நன்னாளில் வள்ளலார் குருகுலத்தை ஓ.பி.ஆர் ஆரம்பித்தார். அப்போது கட்டடம் எதுவும் கட்டப்படாததால் பண்ரூட்டி விழாமங்கலம் திரு.சொக்கலிங்கம் செட்டியார் இசைவு பெற்று வடலூரில் உள்ள அவருடைய சத்திரத்தில் வாடகையில்லாமல் நடத்தப்பெற்றது.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அன்புடன் வழங்கிய நிலத்தில் வள்ளலார் குருகுலத்துக்கான பள்ளிக்கட்டடங்கள், தியான மண்டபம், சமையல் விடுதி முதலியவற்றை ஓமந்தூரார் கட்டினார்.

**இன்னும் வளரும்......**

**தொகுத்தவர் வீ.செல்வராஜு**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து

# ஓ.பி.ஆர் பிறந்தநாளில் முப்பெரும் விழா




கடந்த பிப்ரவரி 1, 2024 அன்று **ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை**யின் சார்பில் அதன் அறங்காவலர்கள் திரு.L.தமிழரசன், திரு.V.செல்வராஜு, திரு.R.ரமேஷ், திருமதி.தேவி மோகன், திரு.D.மணிவாசகன், திரு.V.ஜெயக்குமார்,




திரு.K.ரங்கராஜன், திரு.P.ஜெயக்குமார், திரு.R.ரமேஷ்குமார், திரு.M.ஜெயபிரகாஷ், திரு.J.அருண்குமார், திரு.N.செல்வராஜ், திரு.N.சுந்தர்ராஜ், ரெட்டி மலர் ஆசிரியர் திரு.R.இராஜசேகரன், இணை ஆசிரியர் திரு.R.அன்பழகன், ரெட்டி இளைஞர் பேரவை நிர்வாகி திரு.R.ராஜேஷ், திரு.R.பாபு, முன்னாள் துணைத்தலைவர் திரு.S.அனந்தமோகன், திரு.குமரைய்யா ஆகியோர் உத்தமர் ஓ.பி.ஆர் மற்றும் ஐயா கே.ஆர்.டி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி அறக்கட்டளையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து உத்தமர் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாளையொட்டி அன்னாரது பிறந்தநாள் விழா, “கல்வி காவலர்” ஐயா கே.ரங்கராஜன் (கே.ஆர்.டி.) அவர்களின் 5வது நினைவு நாள் மற்றும் திருமதி.தேவி மோகன் அவர்கள் எழுதிய “ஓமந்தூரார் முதல் முதல்வர்” என்ற தமிழ் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பால் உருவான **“OMANDURAR Premier Chief Minister”** என்கிற ஓ.பி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூல் வெளியீட்டு விழா என முப்பெரும் விழா சென்னை, மேற்கு சைதாப்பேட்டை, No.25/3, மேற்கு ஜோன்ஸ் ரோடு, ஸ்ரீரேகா மஹாலில் நடைபெற்றது.




நிகழ்ச்சிகளை திரு.கலைச்செல்வன், திருமதி.பொர்க்கலை மற்றும் கே.ஆர்.டி.கேரியர் அகாடமி மாணவி செல்வி.S.ஷண்முகப்பிரீதா ஆகியோர் அழகுடன் ஆங்கிலத்திலும், தமிழிலும் தொகுத்து வழங்கினர்.




தமிழ்தாய் வாழ்த்தினைத்தொடர்ந்து திருமதி.தேவிமோகன், திருமதி.ஆனந்தி ரங்கராஜன், திருமதி.அமிர்தா ராஜகோபாலன், திருமதி.பெர்க்கலை ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றினர்.

நிகழ்ச்சியில் KRT CAREER ACADEMYல் இலவச பயிற்சி பெற்று TNPSC, TNUSRB, SSC போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற 30 மாணவ, மாணவி களுக்கு சிறப்பு விருந்தினர் திருமதி.Dr.J.விஜயராணி I.A.S அவர்களது திருக்கரக்களால் நினைவுப்பரிசு வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டனர்.




நிகழ்ச்சியில் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் இலவசப்பயிற்சி மேற்கொண்டு வரும் மாணவர் களின் வெற்றிக்கு சிறப்பாக வழிகாட்டி வரும் ஆசிரியர்கள் திரு.ஜாகிர் உசேன், திரு.P.S.சந்திரன், திரு.சுவாமிநாதன், திரு.P.சைலேஸ்வரன், திரு.B.ராம்குமார் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்று பேராசிரியருமான, Prof.Dr.N.ராஜேந்திரன் அவர்கள் “OMANDURAR Premier Chief Minister” என்கிற ஆங்கில மொழிப்பெயர்ப்பு நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

அதுசமயம் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் அறங்காவலர் திரு.R.ரமேஷ் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நலத்திட்ட பயனாளிகளை தேர்வு செய்யும் பொறுப்பினை முதுபெரும் சமூக சேவகி திருமதி.அமிர்தா ராஜகோபாலன் அவர்கள் திறம்பட தேர்வு செய்து தந்தார்.

இறை வணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்ச்சிக்கு ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனர் திரு.V.செல்வராஜு அவர்கள் வரவேற் புரை நிகழ்த்தினார். அவர் தமது வரவேற்புரையில், “இன்று தமிழகம் முழுவதும் ஓமந்தூராரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ள வருகைத் தந்திருக்கின்ற சிறப்பு விருந்தினர் திருமதி.Dr.J.விஜயராணி I.A.S அவர்களையும், அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்று பேராசிரியருமான, Prof.Dr.N.ராஜேந்திரன் அவர்களையும், ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் தலைவர் திரு.L.தமிழரசன் அவர்களையும், நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தந்துள்ள அறங்காவலர் திரு.R.ரமேஷ் அவர்களையும், ஓமந்தூராரின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆங்கில நூல் வெளியிட பெரும் முயற்சி எடுத்துக் கொண்ட அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்களையும், நலத்திட்ட உதவிபெற இருக்கும் பயனாளிகளையும், கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் மாணவ, மாணவிகள், ஆசிரிய பெருமக்கள், அறங்காவலர்கள், ரெட்டி இன







உறவுகள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

உத்தமரின் பிறந்தநாள் விழாவை **ரெட்டி இளைஞர் பேரவை** தொடங்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து கொண்டாடி வருகிறோம். 2005ம் ஆண்டு அன்னாரது 110வது பிறந்தநாள் விழாவை சென்னை கலைவாணர் அரங்கத்தில் 110 இளைஞர்கள் இரத்ததானம் வழங்கி அதே நாளில் நான் (திரு.V.செல்வராஜு அவர்கள்) எழுதிய "தமிழக ரெட்டிகள் வரலாறும், இன்றைய நிலையும்" என்கிற நூலை வெளியிட்டோம்.

தொடர்ந்து 2008ம் ஆண்டு **ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை** தொடங்கப்பட்டு அதன் மூலம் புதிய இளம் தொழில்முனைவோருக்கு வழிகாட்டுவது, கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களை போட்டித்தேர்வுகளுக்கு தயார் படுத்துவது, கல்வி, மருத்துவம், சுகாதாரம் மற்றும் மரம் வளர்ப்பது போன்ற பொது மக்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறோம்.

2009ம் ஆண்டு 'உத்தமர் ஓமந்தூரார் பேரவை' என்ற பெயரில் சென்னையில் ஓ.பி.ஆரின் பிறந்த நாளை பிப்ரவரி 15 அன்று மத்திய புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் திரு.G.K.வாசன், டாக்டர்.கௌசல்யாதேவி, தேசிய முரசு ஆசிரியர் திரு.ஆ.கோபண்ணா, கடலூர் சுத்த சன்மார்க்கத்தின் துணைத் தலைவர் தவத்திரு ஊரன்அடிகள் உள்ளிட்டோரை அழைத்து 114வது பிறந்தநாள் விழாவை கொண்டாடினோம். அது சமயம் அமைச் சரிடம் ஓ.பி.ஆர் உருவம் பொறித்த தபால்தலை வெளியிட கோரிக்கை வைத்தோம்.

2010ம் ஆண்டு ஓமந்தூராரின் தபால் தலை வெளியிட முறையாக விண்ணப்பித்து அப்போதைய மத்திய அமைச்சர்களை திரு.ஆ.கோபண்ணா அவர்கள் உதவியோடு அணுகினோம். மத்திய தகவல் மற்றும் தொலை தொடர்புத்துறை அமைச்சராக இருந்த திரு.A.ராசா அவர்களை நேரில் சந்தித்து தபால்தலை வெளியிட எடுத்துக்கொண்ட முயற்சி யின் பயனாக 25.08.2010 அன்று மத்திய அரசு நாடு முழுவதிலும் உள்ள 850 அஞ்சலக மையங்களில் தபால் தலையை வெளியிட்டது.

2021 முதல் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசமாக **கே.ஆர்.டி. கேரியர் அகாடமி** தொடங்கப்பட்டு, போட்டித் தேர்வு களுக்கு இலவச வகுப்புகளை நடத்தி வருகிறோம். இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏழை, எளிய மாணவ, மாணவிகள் பயிற்சி எடுத்து வருகின்றனர். TNPSC, TNUSRB, SSC, UPSC நடத்தும் ஒவ்வொரு தேர்விலும் நம் அகாடமி மாணவர்கள் வெற்றிபெற்று வருகின்றனர். குறுகிய காலத்தில் சென்னையில் இந்த அகாடமி முன்னணி பயிற்சி நிறுவனமாக உருவெடுத்துள்ளது என்பதை பெருமைபட தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இன்று நமது சிறப்பு விருந்தினர் திருமதி.Dr.J.விஜயராணி I.A.S அவர்கள் நினைவு பரிசை வழங்கி ஊக்கவுரை நிகழ்த்தவும், அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்று பேராசிரியருமான, Prof.Dr.N.ராஜேந்திரன் அவர்கள் நூல் வெளியிடவும் வருகைத் தந்திருக்கிறார்கள். அவர்களையும், ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்களையும் மீண்டும் ஒருமுறை வருக, வருக என வரவேற்கிறேன்" என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் தலைவர் திரு.L.தமிழரசன் அவர்கள் தலைமை வகித்தார். அதுசமயம் தமது தலைமை உரையில், "அரிது அரிது, மானிடனாய் பிறப்பது அரிது என்று சொல்லுவார்கள். இந்த மானிடப்பிறவியில் அரிய பல அற்புதங்களை சென்னை மாகாணத்தின் பிரதமராக இருந்த உத்தமர் ஓமந்தூரார் அவர்கள் 1946ல் பதவியேற்று சிறப்புடன் செயல்படுத்தி யுள்ளார். இன்று அவருக்கு 129வது பிறந்தநாளை நாம் கொண்டாடுகிறோம். அதேபோல் கல்விக்காக ஏழை, எளிய மக்களுக்கு இல்லையென்று சொல்லாமல் உதவிக்கரம் நீட்டிய தொண்டுள்ளம் கொண்ட ஐயா கே.ஆர்.டி அவர்களின் 5ம் ஆண்டு நினைவு தினத்தையும் கொண்டாடுகிறோம். எங்கள் அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு என்றென்றும் பாடுபட்டு வருகின்ற அறக்கட்டளை அறங்காவலர்களுக்கும், நன்கொடையாளர் களுக்கும் அறக்கட்டளையின் சார்பில் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாளில் நம் அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் எழுதிய ஆங்கில நூல் பிரதியை வெளியிடவும், அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும் வருகைத்தந்திருக்கின்ற சிறப்பு விருந்தினர்களை வரவேற்கிறோம். ஓமந்தூரார் தொண்டுள்ளத்தோடு அன்று தொடங்கிய தொழுநோயாளிகள்




காப்பகத்திலிருந்து வந்துள்ள நலத்திட்ட உதவிகளை பெற உள்ள பயனாளிகள் மற்றும் மாணவ, மாணவிகளின் வருகை எங்களுக்கு உத்வேகத்தையும், அங்கீகாரத்தையும் வழங்கி யிருக்கிறது. மாணவ, மாணவிகளுக்கு எனது வேண்டுகோளாக சொல்ல விரும்புவது நீங்கள் அனைவரும் பிரதிபலன் பாராமல் ஏழை, எளிய குழந்தைகளுக்கு எங்களைப்போல் உதவ வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பு” என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்ட திருமதி.Dr.J.விஜயராணி I.A.S அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி பேசும்போது, “ஒரு குட்டி கதையோடு ஸ்டார்ட் பண்ணலாம் பார்க்கிறேன். ஏன்னா தினம் தினம் படி படி படி வாழ்க்கை ரொம்ப பெருசு என்று பெற்றோர்கள் சொல்லுவார்கள். அதை ஜெயிக்கணும்னு சொல்லுவாங்க. ஒரு காக்கா கதை வழக்கமா பாட்டிகள் சொல்ற காக்கா கதை இல்லை. இது வேற காக்கா கதை. ஒரு ஊர்ல ஒரு காக்கா இருந்ததாம். அந்த காகத்திற்கு அதிக ஆதங்கம் எவ்வளவோ பறவைகள் இருக்கிறப்போ நாம மட்டும் பறந்து பறந்து திரியறோம், கறுப்பா வேற இருக்கோம் என்று ஆதங்கப்பட்டதாம். ரொம்ப சக்தி வாய்ந்த புத்ததுறவிகள் கிட்ட போனதாம். எல்லா பறவைகளையும், விலங்கு களையும் கடவுள் ரொம்ப அழகா படைச்சி இருக்காரு. வீட்டுல எல்லாரும் வளர்க்கிறார்கள். நாமும் வேறு ஏதாவது பறவை போல மாறிவிட வேண்டும் என நினைத்ததாம். நேராக புத்த துறவியிடம் சென்று என்னை வேறொரு பறவை—யாக மாற உதவுங்கள் என்று சொன்னதாம். அதற்கு புத்த துறவி நீ போய் உனக்கு எந்த பறவையாக மாற விருப்பமோ அது எந்த பறவை என்று பார்த்துவிட்டு வா என்று அனுப்பினாராம்.

முதலில் அந்த காகம் ஒரு அன்னப்பறவையை பார்த்ததாம். காகம் அந்த அன்னப்பறவையிடம் உன்னைப்போல மாற ஆசைபடுகிறேன் என்று சொன்னதாம். அதற்கு அன்னப்பறவை ஐயோ என்னுடைய வாழ்க்கையே ரொம்ப கஷ்டம் என்னால் வெயில் தாங்க முடியாது. என்னுடைய வாழ்க்கையை கேட்காதே என்று சொன்னதாம். நாம் வேறொரு பறவையாக மாறலாம் என்று சொல்லி காகமும், அன்னமும் சேர்ந்து மயிலை பார்த்ததாம்.

மயிலைப் பார்த்து உன்னைப் போல மாறலாம் என்று இருக்கிறோம் என்று கூறியதாம். அதற்கு மயில் எனக்கு பல கஷ்டங்கள். என்னுடைய இறகுகளை எடுப்பதற்காக என்னை வேட்டையாட நிறைய பேர் வருவார்கள். நான் பயந்து தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று சொன்னதாம். மூன்று பறவைகளும் புத்தத்துறவியிடம் சென்று நடந்தவைகளை கூறியதாம்.

அதற்கு புத்த துறவி யாருக்கும் எந்த கஷ்டமும், எந்த சஞ்சலமும் இல்லாத வாழ்க்கை கிடையாது. எல்லாருடையவாழ்க்கையிலும் கஷ்டம் இருக்கும், சிரமம் இருக்கும். அதையெல்லாம் கடந்து நாம் நம் வாழ்க்கையை தகவமைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும். நீங்கள் மூன்று பேரும் போய் கடவுள் கொடுத்த வாழ்க்கையே நல்ல வாழ்க்கை என்று வாழுங்கள் என்று அனுப்பி வைத்தாராம். இந்த குட்டி கதை மூலம் நான் சொல்ல விரும்புவது கடவுள் ஒவ்வொருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட சிறகுகளை தந்திருக்கிறார். அந்த சிறகுகள் நீளமாக இருக்கிறதா, குட்டையாக இருக்கிறதா,



சின்னதாக இருக்கிறதா, பலவண்ணங்களில் உள்ளதா என்பனவற்றை வைத்து தங்கள் சூழலுக்கு ஏற்ப முயற்சிகளை வளர்த்துக் கொள்வது என்பது உங்களது கடமை.

கடவுள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான வாழ்க்கை சூழலை கொடுத்திருக்கிறார். அந்த வாழ்க்கை சூழலில் நீங்கள் உங்களை தகவமைத்து கொண்டு யாரையும் குற்றம் சொல்லாமல், யாரையும் குறை கூறாமல் எந்த தோல்வி களுக்கும் காரணம் சொல்லாமல் கடந்து, அவற்றை தாங்கி கொண்டு, முயற்சி செய்து அதில் வெற்றி பெற வேண்டும்.

வாழ்க்கை மிக கடினமானது என்று சொல்லுகிறோம். 1930 காலங்களில் அட்லாண்டிக் கடலை பறந்து கடந்த முதல் அமெரிக்கா பெண் அமெலியா ஏர்ஹார்ட் (Amelia Earhart) முதல் பெண் விமானி.அவர் அந்த சாதனையில் திருப்தியடைய வில்லை. அவர் சொல்லும்போது இந்த சாதனையில் என் மனது திருப்தியடையவில்லை. நான் பசிபிக் கடலை கடக்க வேண்டும். அதுதான் என் முயற்சியின் வெற்றியாக நான் கருதுகிறேன் என்றார்.

**இதுதான் எனது இலக்கு என்பதை தேர்வு செய்து முடிவு செய்வதுதான் வாழ்க்கையில் மிகவும் கடினம்.** இங்கு இருக்கும் நீங்கள் அனைவரும் அதை கடந்து விட்டீர்கள். நீங்கள் வாழ்க்கை வெற்றிப்படிகளை நோக்கி நகர தொடங்கி விட்டீர்கள், ஏறி விட்டீர்கள். ஏணியில் பாதியில் ஏறி நிற்கிறீர்கள். ஏணியில் ஏறும் போது மேலே பார்க்கக் கூடாது, கீழே பார்க்க கூடாது. ஒவ்வொரு படியிலும் கவனமாக நீங்கள் ஏற வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நொடியும் உங்கள் கவனத்தில் இருக்கவேண்டும். ஒன்றிரண்டு நிமிடம் ஓய்வுஎடுத்துக் கொள்கிறேன் என்று நீங்கள் ஏணிப்படியில் நின்றால் தவறி கீழே விழுவீர்கள். எங்கு அடிபடும் என்று தெரியாது. அந்த அடிக்கு நீங்கள் மருந்து போட்டுக்கொண்டு எழுந்திருப்பதற்குள் வேறொருவர் உங்களை தாண்டி ஏறி போய் கொண்டிருப்பவர் மேலே போய் இலக்கை அடைந்து விடுவார். ஒரு கூட்டம் உங்களை தாண்டி போய் இருக்கும், இன்னொரு கூட்டம் உங்களுக்கு இணையாக இருக்கும், இன்னொரு கூட்டம் முதல் படியில் கால் வைத்திருக்கும். இதுதான் இயல்பான வாழ்க்கை.

இத்தனையும் கடந்தப்பின் நீங்கள் தோல்வியை சந்தித்தால் அதுதான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது உங்களை உடனே சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்காது. மரண வலி வலிக்கும். இந்த வாழ்க்கை வாழவேண்டுமா என்று தோன்றும். அதையும் தாண்டி வர வேண்டும்.

பாரக் ஒபாமா அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி 44வது ஜனாதிபதியாய் இருந்தவர். 2009 முதல் 2017 வரை அமெரிக்கா ஜனாதிபதி யாக இருந்தவர். தன்னைப் பற்றி அவர் வரலாற் றை சொல்லும் போது 'நீ முயற்சி செய்யாமல் இருப்பது தவறில்லை, தோற்று போவது தவறில்லை. மிகப் பெரிய தவறு என்ன தெரியுமா? தோல்விக்குப் பின் நீ மீண்டும் முயற்சி செய்யாமல் இருப்பது, அதைவிட பெரிய தவறு என்ன தெரியுமா? இரண்டாவது தடவை தோற்ற பிறகும் மூன்றாவது முறை முயற்சி செய்யாமல் இருப்பது, மன்னிக்க முடியாத தவறு எது தெரியுமா? நீங்கள் மூன்றாவது முறை தோற்ற பின்பும் நான்காவது முறை முயற்சி செய்யாமல் இருப்பது. வாழும் உதாரணம் என்னவென்றால் ஒவ்வொரு தோல்விக்கு பின்பும் வெற்றியின் பாதையை அடைந்துவிட்டேன் என்று நினை. வெற்றி உன் பக்கத்தில் வரும். இதையெல்லாம் தாண்டி ஒரு முக்கியமான விஷயம் இங்கு இருக்கிறவர்கள் யாரும் பெரிய செல்வந்தர்களாய் இருக்க முடியாது. எல்லோரும் மாத சம்பளம் வாங்கும் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்களாய் இருப்பீர்கள் அல்லது விவசாயம் சார்ந்த தொழிலை செய்பவர்களாய் இருப்பீர்கள். பெரும் பாலானோரின் குடும்ப சூழல் எப்படி இருக்கும். 20ம் தேதிக்கு பிறகு ஒவ்வொரு நூறு ரூபாயையும் பத்திரப்படுத்தி 30ம் தேதிவரை வைத்துக் கொள்ளும் சூழ்நிலையை சேர்ந்தவர்களாகத் தான் பெரும்பாலும் இருப்பீர்கள்.

சோர்வடையும்போதெல்லாம் உங்கள் தந்தையின் முகத்தை, உங்கள் தாயின் முகத்தை நினைத்துக்கொள்ளுங்கள். புது வெள்ளம், புதிய உற்சாகம் உங்கள் குருதியில் பாயும். எத்தனையோ பேர் பேன்ஸி ஸ்டோர், துணிக் கடையில் வேலைசெய்கிறார்கள். அதற்கெல்லாம் உங்களை அனுப்பாமல் இந்த கே.ஆர்.டி கேரியர் அகாடமிக்கு அனுப்பி இருக்கிறார்கள். அகாடமியின் சேவை அளப்பரியது. நீங்கள் இங்கு உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் இதற்குள் இதன் நிர்வாகிகளின் மிகப் பெரிய தியாகம் ஒளிந்திருக்கிறது. இன்னொரு உண்மையை சொல்கிறேன் உங்களுக்கு. இன்று பெரிய மனிதர்களாய் இருக்கும் அத்துனை பேரும் இந்த சென்னை மாநகரத்திற்கு ஒரு காலத்தில் தோளின் பின்னாடி ஒரு பை போட்டுக்கொண்டு, ஒரு பையை சுமந்து வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

ஒரு சிலர் தான் வாழ்க்கையில் உடனே மேலே சென்றிருப்பார்கள். ஆனால் நீங்கள் வியந்து பார்க்கும் மாமனிதர்களால் ஆனது இல்லை இந்த மாநகரம். ஒற்றை பையுடன், கசங்கிய ரூபாய் நோட்டுடன் இந்த சென்னை மாநகரத்திற்கு






வந்தவர்கள் தான் அதிகம். நீங்கள் அனைவரும் இந்த போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற வாழ்த்துகள், நன்றி வணக்கம்" என்றார்.

https://youtu.be/3MAsH26V0qE?si=u6NjmOa7Hm9DdcbB

அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்று பேராசிரியருமான, Prof.Dr.N.ராஜேந்திரன் அவர்கள் "OMANDURAR Premier Chief Minister" என்கிற ஆங்கில நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கி பேசும்போது, "இன்றைய சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் திருமதி.Dr.J.விஜயராணி I.A.S அவர்களே, இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற திரு.L.தமிழரசன் அவர்களே, இப்பொழுது வெளியிட்ட நூலின் ஆசிரியர், [இன்றைக்கு தினமணியில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டிருக்கும்] பெருமைமிகு திருமதி.தேவிமோகன் அவர்களே, அறங்காவலர் திரு.R.ரமேஷ் அவர்களே மற்றும் இதை திறம்பட நடத்தி வருகின்ற திரு.V.செல்வராஜு அவர்களே, ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர்களே, கே.ஆர்.டி.கேரியர் அகாடமியின் ஆசிரியர்களே, பெற்றோர்களே, மாணவ, மாணவிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம். இன்றைக்கு முப்பெரும் விழாவாக சிறப்புமிகு தமிழகத்தின் முதல் முதல்வர் ஓமந்தூரார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழா, கே.ஆர்.டி அவர்களின் 5வது நினைவு நாளாகவும், முக்கியமாக இன்றைய நாளில் நூல் வெளியீட்டு விழாவும் சேர்ந்து முப்பெரும் விழாவாக கொண்டாடி கொண்டிருக்கிறோம். எனக்கு முன் பேசிய சிறப்பு விருந்தினர் திருமதி.Dr.J. விஜயராணி I.A.S அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த அறிவுரையையும், வாழ்க்கையின் யதார்த்தத்தையும் சொல்லியிருக்கிறார்கள். முயற்சி என்பது முதலாவது இருக்கவேண்டும். 1 சதவீதம் உழைப்பு, 99 சதவீதம் உத்வேகம். இதுப்போன்ற விழாக்களில் கலந்துக்கொள்ளும்போது அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் போது நாம் ஊக்கப்படுத்தப்படுகிறோம். எத்தனை முறை விழுந்தாலும் நாம் எழ வேண்டும். விழுவது என்பது சாதாரண நிகழ்வு. எழுவது என்பது எல்லோராலும் முடியுமா என்பது அடுத்த விஷயம். வரலாற்று பேராசியர் என்பதால் சொல்லுகிறேன். தோற்றவர்கள் எல்லாம் கஜினி முகமதுவை உதாரணமாக சொல்லுவார்கள். அப்படி பல பேர் தோல்விகளுக்கு அஞ்சாமல் முயற்சி செய்ய வேண்டும்.

UPSC என்கிற கனவை அடைய நிறைய பேர் போட்டி போடுகிறார்கள். அந்த UPSC மாணவர்களை தேர்வு செய்கின்ற ஆலோசனை குழுவில் நான் கிட்டதட்ட 15 வருடமாக இருக்கிறேன். யாருக்கெல்லாம் முயற்சி இருக்கின்றதோ அவர்களுக்கெல்லாம் வெற்றி என்பது நிச்சயம் கிடைக்கும். எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பார்கள் என்பதல்ல.

வரலாற்றில் சில பக்கங்கள் Silence in History என இருக்கும். அந்த இடத்தில் வரலாறு இல்லை என்பது பொருளல்ல. வரலாறு இருந்தாலுமே அந்த பக்கங்கள் மறைக்கப்பட்டிருக்கிறது என்பது பொருள். அத்தகைய பக்கங்கள் தமிழ்நாட்டில் ஓமந்தூரார் வரலாறும், அவரது வாழ்க்கையும் மறைக்கப்பட்டு இருக்கிறது. அதனை திருமதி.தேவிமோகன் அவர்கள் மிக அருமையாக ஓ.பி.ஆரின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்வுகளை கோடிட்டு காட்டியிருக்கிறார்.

வரலாறு என்பது பெரும் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு. ஓ.பி.ஆர் அவர்களுடைய வரலாற்றை "ஓமந்தூரார் முதல் முதல்வர்" என்கிற புத்தகத்தை திருமதி.தேவிமோகன் அவர்கள் எழுதி வழங்கியிருக்கிறார். அதை படித்தேன். அதற்கு முன்பாக திரு.V.செல்வராஜு அவர்கள் எழுதியிருந்த ஆய்வுக்கட்டுரையை நான் அவரது ஆசிரியர் என்பதால் எனக்கு அனுப்பியிருந்தார். அதில் ஒரு அத்தியாயம் மட்டும் ஓ.பி.ஆரை பற்றி முழுமையாக இருந்தது. அதைப் படித்தப்பின்பு தான் இப்பேர்பட்ட சாதனையாளரை ஆய்வின் தலைப்பாகவே எடுத்திருக்கலாம் என்று சொன்னேன். அந்த வாய்ப்பினை தவறவிட்டு விட்டோம். காரணம் நாம் ஆய்வின் இறுதியில் இருப்பதால் அது நடைபெறாமல் போயிற்று. ஆனால் அந்த குறையை திருமதி.தேவிமோகன் அவர்கள் முழுமையாக பூர்த்தி செய்திருக்கிறார். இந்த புத்தகத்தினுடைய சிறப்பு என்னவென்றால் முதல் பக்கம் ஆரம்பித்தால் இறுதி பக்கம் வரை புத்தகத்தை கீழே வைக்காமல் படிக்கவேண்டும் போல் அமைந்துள்ளது. அதுதான் சிறப்பு. அப்படி ஒரு சிறப்புடன் திருமதி.தேவிமோகன் அவர்கள் எழுதியிருக்கிறார். இதனுடைய தமிழ் புத்தகத்தை திரு.மணிமாறன் அவர்கள் மெயில் மூலம் அனுப்பி இருந்தார். இதன் ஆங்கில வடிவத்தை திரு.V.செல்வராஜு அவர்கள் அனுப்பியிருந்தார். நான் எப்போதும் புத்தகவடிவத்தையே

விரும்புவேன். அந்த தமிழ் நூலை கேட்டு வாங்கி சுமார் 1½ மணி நேரத்தில் அந்த புத்தகத்தை கீழே வைக்காமல் படித்து முடித்து விட்டேன். அந்தளவிற்கு அந்த புத்தகம் இருந்தது. படிப்பவர்களின் மனநிலையை புரிந்து அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்திருந்தது. ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில் இரண்டு வருடங்கள் மட்டுமே ஓ.பி.ஆர். ஆட்சி செய்தார். அவரால் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் தான் பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களுக்கு Roadmap ஆக அமைந்தது. ஓமந்தூராருடைய ஆட்சி சமூக புரட்சிக்கு வித்திட்ட ஆட்சியாக அமைந்திருந்தது. அதற்கு காரணம் அவரது நேர்மை, எளிமை, தெளிவு, தேசம், தெய்வீகம் என இப்புத்தகத்தில் மிக அழகாக ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.

ஓ.பி.ஆர். முதல்வராக இருக்கும் போது சர்தார் வல்லபாய் பட்டேல் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்போது அரசியல் உள் நோக்கத்தோடு ஓமந்தூரார் மீது ஒரு புகார் வந்தது. அதனை விசாரிக்க வந்த சர்தார்பட்டேல் ஓமந்தூரார் விமான நிலையம் வருவார் என எதிர் பார்த்தார். ஆனால் அவர் தலைமை செயலகத்தில் தனது பணியை பார்த்துக்கொண்டிருந்தார். அவரை பட்டேல் நேரில் சந்தித்து ஏன் என்னை பார்க்க வரவில்லை என்று கேட்டார். நீங்கள் என் மீது சொல்லப்பட்ட புகார் குறித்து விசாரணை செய்ய வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் பணியை செய்யுங்கள். நான் என்னுடைய பணியை செய்கிறேன் என்று அவரிடம் கூறினார். இப்பேர் பட்ட நெஞ்சுரம் மிக்க நேர்மையானவர் இந்த புகாருக்கு உரியவரல்ல என்று முடிவெடுத்து பட்டேல் அவர்கள் திரும்பி சென்றார் என்று இந்த புத்தகத்தில் ஆசிரியர் மிக அழகாக குறிப்பிட்டிருக் கிறார்.

பிரபல கிரிமினல் வழக்கறிஞர் திரு.N.சோமசுந்தரம் அவர்களை நீதிபதியாக நியமிக்க தலைமை நீதிபதிக்கு பரிந்துரை செய்கிறார். ஆனால் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் திரு.V.கோபால்சாமி ஐயங்கார் தனது மருமகன் திரு.V.K.திருவேங்கடாச்சாரிக்கு கிடைக்கும் எனக்காத்திருந்தார். நியமனம் பிறருக்கு வழங்கியதை பாரதபிரதமர் ஜவஹர்லால் நேருவிடத்தில் திரு.V.கோபால்சாமி ஐயங்கார் கொண்டு சென்றார். இதனை முழுமையாக அறிந்து கொள்ளாத ஜவஹர்லால் நேரு “நீங்கள் பிராமணரல்லாதோர் அரசாங்கத்தை ஜாதிரீதியாக நடத்தப் பார்க்கிறீர்கள்” என்று ஓமந்தூராரிடம் கோபப்பட்டார். சிறிதும் தயங்காமல் ஓமந்தூரார் நேருவிடம் நீங்கள் சொன்னவிதத்தில் நானே அரசாங்கத்தை நடத்தவில்லை. உங்களுடைய வார்த்தைகளை திரும்ப பெறுங்கள் அல்லது இப்பொழுதே என் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஓமந்தூரார் சொன்னதும் ஜவஹர்லால் நேரு அதிர்ச்சி அடைந்தார். பின்னாளில் நீதிபதி ராஜமன்னார் இதுகுறித்து சொல்லும் போது ஓமந்தூரார் பிராமண விரோதி அல்ல. சட்ட விரோதமாக—நீதிக்கு புறம்பாக எந்த ஜாதியினருக்கும் ஓமந்தூரார் சலுகை காட்ட மாட்டார் என இந்த புத்தகத்தில் ஆசிரியர் திருமதி.தேவிமோகன் அழகாக குறிப்பிட்டிருக்கிறார்.




சமுதாயம் எப்படி இருக்கவேண்டும் என்கின்ற போது ஓமந்தூரார் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தைபடித்து தெரிந்துக்கொள்ளலாம் என்கிற அளவிற்கு அவரது வாழ்க்கை வரலாறாக அமைந்திருக்கிறது.

குடும்பத்தின் முதல் பெண் குழந்தையை கோயிலுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் முன்பு இருந்தது. இது தேவதாசி முறை என அழைக்கப்படுகிறது. இது குறித்து விவாதங்கள் சட்டமன்றத்தில் அனல் பறக்க நடந்திருந்தாலும் ஓமந்தூரார் முதலமைச்சர் ஆன பிறகு தான் 1949ல் தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் அமலுக்கு கொண்டு வந்தவர்.

தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு முதல் நடவடிக்கையை மேற்கொண்டவர் இவரே. ஆதி திராவிடர் நலத்துறை என்ற தனித் துறை ஓமந்தூரார் ஆட்சியில் உருவாக்கப் பட்டது. இவரது இந்த சமூகப்புரட்சி தமிழக அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமை கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர். அனுமதிசீட்டு முறையை அறிமுகம் செய்தவர். தம்மை யார் சந்திக்க வந்தாலும் பெயர், முகவரி, நேரம் மற்றும் சந்திப்புக்கான நோக்கம் என்ன என அச்சிடப்பட்ட அனுமதி சீட்டு கொடுக்கப்படும். சந்திப்புக்கான நோக்கம் என்ற கேள்விக்கு எழுதிய பதில் திருப்தி அளிக்காவிட்டால் அது எவ்வளவு உயர்ந்த பதவியில் இருப்பவராகஇருந்தாலும் அவர்களை சந்திக்க மறுத்து விடுவார். ஊழலுக்கு எதிராக ஓமந்தூரார் கடும்நடவடிக்கை எடுத்திருக்கிறார். இது தவிர பூரண மதுவிலக்கு கொள்கை, ஜமீன்தாரி முறை ஒழிப்பு, தமிழ் வளர்ச்சி கழகம் உருவாக்கியது, கல்வி முறையில் சீர்திருத்தம், தமிழ் மொழிக்கு முக்கியத்துவம், கோயில் சொத்துக்கள் மீட்பு, உழவர் நலன் சட்டங்கள், மகாகவி பாரதியார் பாடல்கள் நாட்டுடமை, தமிழக அரசின் லட்சினையான கோபுர சின்னத்தை வடிவமைத் தவரும் இவரே. தமிழ் கலைக்களஞ்சியத்தை உருவாக்கியவர். திருக்குறளை ஆரம்பப்பள்ளிகளில் கட்டாயமாக்கி தாய்மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்தியவர். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தமிழில் முதல் முதலில் உரையாற் றியவரும் இவரே.




‘விவசாய சீர்த்திருத்தமும், சமநிலையும்’ என்ற புத்தகத்தை எழுதியவர். உழவு, தொழில், வாணிபம், அரசு அலுவலகங்களில் ஊழியர்களின் வேலை ஆகிய 4 பிரிவுகளும் சமநிலை அடையும் வரை விவசாயத்திற்கு நிலையான மேம்பாடு இல்லை என்கிற கொள்கையை கொண்டிருந்தவர். அவர் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டவர். தாம் ஒரு விவசாயி என்பதை எப்பொழுதும் நினைவு கூர்ந்தவர் ஓமந்தூரார்.

காந்திஜி நடத்திய ஒத்துழையாமை இயக்கம், தனி நபர் சத்தியாகிரகம் என மகாத்மாவின் கொள்கைகளோடு ஒத்து சென்றிருந்தாலும், ஒருமுறை காந்திஜி அவர்களோடும் கூட முரண்பட்டவராக ஓமந்தூரார் இருந்ததை இந்த வரலாற்றுப் புத்தகத்தில் மிக நேர்த்தியாக சொல்லப்பட்டிருக்கிறது. ஓமந்தூராரின் அமைச்சரவையில் காவல்துறை இலாகா அமைச்சராக இருந்தவர் டாக்டர்.சுப்பராயன். ஐதராபாத் இந்தியாவுடன் இணைக்கும் விவகாரத்தில் அரசின் ரகசியம் கசியும் என அஞ்சி சுப்பராயன் இலாகாவை ஓமந்தூரார் பறித்தார். காரணம் சுப்பராயன் இல்லத்தில் பொதுவுடமை இயக்கத்தில் அவரது மகன் மோகன் குமாரமங்கலமும், மகள் பார்வதி கிருஷ்ணனும் இருந்ததே. காந்திஜி மறுபரிசீலனை செய்யுமாறு சொன்னதை ஏற்க மறுத்த இவர், பின்னர் அவரே ஐதராபாத் இந்தியாவுடன் இணைந்த பிறகு தன் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார். இப்படி காந்திஜியின் கொள்கைகளோடு சில நேரங்களில் முரண்பட்டவராக இருந்தவராக நேதாஜியை மட்டுமே சொல்லுவார்கள். அதன் பிறகு அந்த இடத்தை பிடித்திருப்பவர் ஓமந்தூரார் ஒருவர் மட்டுமே. கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாதவராக தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர்.

காமராஜருக்கும் முன்னோடியாக வாழ்ந்தவர் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இப்படி நேர்மையோடும், கொள்கை பிடிப்போடும், தேச பற்றோடும், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக வாழ்ந்த தலைவருக்கு நவீன தமிழக வரலாற்று பாடப்புத்தகத்தில் இடமில்லை என்பது வேதனையளிக்கிறது. அது இடம்பெற வேண்டும் என என் விருப்பத்தை இங்கு பதிவு செய்கிறேன். ஓமந்தூராரின் வாழ்க்கையை படிக்கவும், எடுத்துச்சொல்லவும் கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்காக அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்” என்றார்.

“ஓமந்தூரார் முதல் முதல்வர்” என்ற தமிழ் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பால் உருவான “OMANDURAR Premier Chief Minister” என்கிற நூல் வெளிவர காரணமாக இருந்த ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர் திருமதி.தேவிமோகன் அவர்கள் பேசும்போது, “உண்மையில் சொல்லப்போனால் நான் முதலில் திரு.செல்வராஜு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அவர் முதன்முதலில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை தொடங்கும் போது ஓமந்தூரார் யார் என்று கேட்டேன். அவர் தான் எனக்கு ஓமந்தூராரைப்பற்றி சொன்னவர். நீங்கள் எல்லாம் முதலில் அவரை பற்றி அறிந்துக்கொள்ள வேண்டும் என விரிவாக எடுத்துச்சொன்னார். இதுமாதிரி எந்த வரலாற்றுப்புத்தகத்தில் படிக்கவில்லையே என்று தோன்றியது. அதன் பிறகு எனக்கு அதில் மிகப்பெரிய ஆர்வம் ஏற்பட்டு எழுத்தாளர் நெல்லை திரு.மணிமாறன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவரும் நிறைய செய்திகளை எடுத்துச்சொன்னார். அதையே புத்தகமாக முதலில் வெளியிட்டேன். இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த இருவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் தமிழில் எழுதிய இந்த புத்தகம் குறித்து அமெரிக்காவில் வசிக்கும் என் இரு மகள்களிடமும் தெரிவித்த போது அவர்கள் எங்களுக்கு தமிழில் படிக்க தெரியாது என்று சொல்லவே அந்த புத்தகத்தின் ஆங்கில வடிவத்தை திரு.ரங்கராஜன் அவர்கள் மொழி பெயர்ப்பு செய்து கொடுத்தார். விவசாயி யான ஓமந்தூரார் தனது வாழ்க்கையில் இந்தளவு சாதிக்க முடியும் என்கிறபோது நமது கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் பயின்று நீங்களும் வெற்றி பெற்று பதவியில் அமர்ந்து நீங்களும் நினைத்தால் உங்களாலும் சிறந்த நிர்வாகத்தை கொண்டு வர முடியும். நாட்டின் வளர்ச்சிக்காக நீங்களும் முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் வெற்றி பெற வாழ்த்துகள்” என்றார்.

கே.ஆர்.டி கேரியர் அகாடமியில் இலவசபயிற்சி எடுத்துக்கொண்டு TNPSC குரூப் 2 தேர்வில் வெற்றி பெற்றுபணியில் அமர இருக்கும் **திருமதி.மஞ்சுளா** அவர்கள் நன்றிகூறி பேசும் போது, “நான் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருந்து வந்தேன். நான் சென்னை வரும் போது ரூ.50,000/- எடுத்துக்கொண்டு எந்த அகாடமியில் சேரலாம் என்று வந்தேன். அப்போது ஒரு சகோதரி எனக்கு கே.ஆர்.டி. கேரியர் அகாடமியை அறிமுகம் செய்துவைத்தார். இலவசமாக பயிற்சி கொடுக்கிறார்கள் என்று கூறினார். இலவசப்பயிற்சி என்றவுடன் நான் கொஞ்சம் யோசித்தேன். நான் படிக்க நினைத்தது போட்டித்தேர்வுக்கு. இப்போது உள்ள இளைஞர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை நன்றாக தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு கொஞ்சம் வயது கூடுதலாய் இருந்ததால் அவர்களுடன் போட்டிப்போட்டு படிக்க வேண்டும். அந்த தயக்க எண்ணத்துடன் கே.ஆர்.டி. கேரியர்




அகாடமிக்கு வந்து ஒரு வகுப்பில் கலந்து கொண்டேன். அதற்கு பின்னர் போட்டித்தேர்வு எழுதும் வரை இந்த அகாடமியில் தான் படிக்கவேண்டும் என உறுதியான தீர்மானம் எடுத்தேன். கே.ஆர்.டி. கேரியர் அகாடமி சிறந்த வழிகாட்டியாக, திறமையான ஆசிரியர்களை கொண்டு வழிநடத்துகிறார்கள். சென்னையில் அரசுப் பணிகளுக்கான போட்டித்தேர்வு நடத்தும் அகாடமிகள் கல்வியை வணிகமாக பார்க்கிறவர் களாய் தான் இருக்கிறார்கள். தொடர் வகுப்பு களுக்கு வருவது, டெஸ்ட் தேர்வுகளுக்கு மட்டும் வருகிறவர்கள் என பிரித்து கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் நான் குரூப் 2 வகுப்பு ஆரம்பித்த போது சேர்ந்தேன். தமிழக அரசு தேர்வு முடிவுகளை மூன்று மாதத்தில் வெளியிடுவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் தேர்வு முடிவுகள் உடனே வராமல் தள்ளி, தள்ளி போய் 8 மாதம் கழித்து தான் முடிவுகள் வெளியிடப்பட்டது. அது வரை நாங்கள் கே.ஆர்.டி.கேரியர் அகாடமியில் இருந்தோம். திரு.செல்வராஜ் சார் அவர்கள் எப்பொழுதும் மாணவர்களிடம் உங்கள் தேவை என்ன? நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பார்? எங்களுக்கு இலவசமாக உணவு, தேநீர், பாடப்புத்தகங்கள், நூலக வசதி, அமைதி யான சூழ்நிலையில் படிப்பறை, வழிகாட்ட அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் என எல்லாவற் றையும் எங்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தார். ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள் எங்களைப்பார்க்க வரும் போதெல்லாம் எது வேண்டுமென்றாலும் எங்களிடம் சொல்லுங்கள் என்று எங்களை அன்போடு நலம் விசாரிப்பார்கள். கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கிராமத்தில் இருந்து வந்து கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் இலவசமாக பயிற்சியினை பெற் றோம். ஒரு அறக்கட்டளை எல்லாவற்றையும் இலவசமாக தரவேண்டும் என்பதில்லை. ஆனால் ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை TNPSC, TNUSRB, SSC, UPSC போன்ற மத்திய, மாநில அரசு நடத்தும் எல்லா போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு ஒரு பறவைகள் சர–ணாலயமாக இருந்து எல்லாவற்றிலும் உதவி செய்து வருகிறது. நாங்கள் கே.ஆர்.டி. கேரியர் அகாடமிக்கு அதிகமாக நன்றி கடன் பட்டிருக்கிறோம் என்று சொல்லும்போது திரு.செல்வராஜ் சார் நீங்கள் ஏதாவது ஒரு அரசுப் பணியில் சேர்ந்தால் தான் எங்களுக்கு பெருமை என்று கூறுவார். போட்டித்தேர்வை எதிர் கொள்ள விரும்பும் அனைவரும் நம்முடைய கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் நம்பிக்கையுடன் சேருங்கள். என்னைப்போல வெற்றிப்பெற்று உங்கள் TNPSC கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள். வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி வணக்கம்” என்றார்.

இதனைத்தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தொடங்கியது. இந்நிகழ்ச்சி யினை ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர் திரு.R.ரமேஷ் அவர்கள் தொடங்கி வைத்து வழங்கினார்.

செங்கல்பட்டு மாவட்டம் பரனூரில் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் திருக்கரங் களால் தொடங்கி வைக்கப்பட்டு INMATES of Leprosy Welfare Associationனால் நடத்தப்படும் தொழு நோயாளிகள் மறுவாழ்வு இல்ல பயனாளி களில் 129 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவி களாக பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து, மதுராந்தகம் அருகே, மாம்பாக்கம் கிராமத்தில் ஐயா ஓ.பி.ஆர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப் பட்ட குருகுலம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு தையல் மிஷின் வழங்கப்பட்டது.

அதேபோல, மதுராந்தகம் பகுதியில் இயங்கி வரும் வனஜா முதியோர் இல்லத்திற்கு 3 இரும்பு மடிப்பு கட்டில்கள் வழங்கப்பட்டன.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர் களுக்கு பிறந்தகுழந்தைகள் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வேண்டு கோளை ஏற்று அவர்களுக்கு 25 பேருக்கும்,







ஏழைக்குழந்தைகள் 25 பேருக்கும் என 50 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டது.

பொளப்பாக்கம் தொழுநோயாளிகள் முதியோர் இல்லத்திற்கு 50 போர்வைகள் மற்றும் சென்னை, மேடவாக்கம் ஆனந்த விநாயகா முதியோர் இல்லத்திற்கு 50 போர்வைகளும் வழங்கப்பட்டது.

பாண்டிச்சேரியில் இயங்கி வரும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் காப்பக மாணவர்களுக்கு, விளையாட்டுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

சென்னை குரோம்பேட்டை, புருஷோத்தமன் நகர், சி.இ.எஸ் நடுநிலைப் பள்ளியின் கோரிக்கையை ஏற்று ஊனமுற் றவருக்கு Electric Iron Box வழங்கப்பட்டது.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம், டோலப்பாக்கம், காவாலியில் உள்ள ஊரக சுகாதார மையத்தில் தங்கியுள்ள எச்.ஐ.வி. பாதித்த 25 நபர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் ரெயின்கோட் வழங்கப்பட்டன.

பின்னர் பாண்டிச்சேரி, ராவுத்தர் குப்பம் பகுதியில் செயல்பட்டு வரும் முதியோர் இல்லத்தில் உள்ள பெண்களுக்கு 20 புடவை களும், ஆண்களுக்கு 20 மேலாடைகளும் வழங்கப்பட்டன.

குன்றத்தூர் புதுப்பேர் கிராமத்தை சேர்ந்த ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று பள்ளிக்கு தேவையான மேஜை, நாற்காலிகள் வழங்கப்பட்டன.

மேடவாக்கத்தில் உள்ள நேரு மாதர் சங்கம் நடத்தும் முதியோர் இல்லத்திற்கு 2 மின்விசிறிகள் வழங்கப்பட்டன.

பின்னர் பாண்டிச்சேரி, ராவுத்தர் குப்பம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் காப்பகம் நடத்தி வரும் சகோதரி.டார்த்தி அவர்கள் நலத்திட்ட உதவிகளை பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்து பேசும்போது, “பல இடங்களில் நன்கொடைகளை பெற்றுதான் எங்கள் நிறுவனத்தை நடத்தி வருகிறோம். வேறு எந்த இடத்திலும் இந்த அளவுக்கு மனமுவந்து உதவி




செய்த நிறுவனத்தை நான் பார்த்ததில்லை. எங்கள் நிறுவனம் மட்டுமல்லாமல் இதுப்போன்று பல நிறுவனங்களிலிருந்தும் இன்று இங்கு வருகை தந்து உதவிகளை பெற்றுக்கொண்டிருக் கிறார்கள். இது எனக்கு மிகுந்த மனமகிழ்ச்சியை தருகிறது. ஐயா ஓ.பி.ஆர் அவர்கள் மறைந்தும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார் என்பதை காட்டுகிறது. மனித நேயத்தை நேசிக்கும் இந்த அறக்கட்டளை அறங்காவலர்கள் அனை– வருக்கும் எங்கள் அனைவரின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

நிறைவாக ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர் திரு.V.ஜெயக்குமார் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி யினை தெரிவித்தார். தொடர்ந்து ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

**முடியும் வரை முயற்சி செய் உன்னால் முடியும் வரை அல்ல; நீ நினைத்ததை முடிக்கும் வரை...**

## அன்பான வாசகர்களே!

**தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை ரெட்டி மலர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

# சென்னை மண்டலம் சார்பில் ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாள் விழா




நமது ரெட்டியார் இனத்திற்கு பெருமை சேர்த்த உத்தமர் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழா கடந்த பிப்ரவரி 1, 2024 அன்று சென்னை மண்டலம் சார்பாக தமிழகமே வியந்து பார்க்கிற அளவிற்கு மிகச்சிறப்பாக காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்பதூர் அடுத்த படப்பை அருகே கசரங்கால் ஹர்ஷா கார்டனில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ரெட்டி நலச் சங்க மகளிர் அணி–யினர் குத்துவிளக்கு ஏற்றி, தெலுங்கு தல்லி கடவுள் வாழ்த்து பாடினர். தொடர்ந்து பின்னணி பாடகர் திரு.V.M.மகாலிங்கம் அவர்களின் இன்னிசை விருந்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

நிகழ்ச்சியில் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாண்பமை வேந்தர் திரு.A.சீனிவாசன் ரெட்டி அவர்கள் கொடியினை ஏற்றி வைத்து நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்.



முன்னதாக சிறப்பு விருந்தினர்கள் ஓமந்தூராரின் திருஉருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர். சென்னை மண்டலத்தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டி அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார். செயலாளர் திரு.P.தாமோதரன் அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதுசமயம் திருப்பதி தேவஸ்தானத்தின் ஆலோசனைக் குழு தலைவர் திரு.J.சேகர் ரெட்டி, கோவில்பட்டி கே.ஆர்.குழுமத்தின் தலைவர் திரு.K.R.அருணாசலம்ரெட்டி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.S.R.ராஜா MLA, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் MLA, தமிழ்நாடு ரெட்டி நலச்சங்கம் மாநிலப் பொதுச்செயலாளர் திரு.K.ஜனகராஜன் ரெட்டி, சங்கத்தின் முன்னணி தலைவர் திரு.M.C.பழனிச்சாமிரெட்டி, சங்க கௌரவத்தலைவர் திரு.M.வெங்கடசுப்பு ரெட்டி, கௌரவ ஆலோசகர் திரு.A.நீல்ராஜ் ரெட்டி, தென்னிந்திய ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.K.V.முத்துமல்லா ரெட்டி, பாண்டிச்சேரி டேக்பான் சங்கத்தின் தலைவர் திரு.M.V.வைத்தியலிங்கம் ரெட்டி, கடப்பா திரு.S.S.ராமசுப்பா ரெட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் வடசென்னை மாவட்டத்தலைவர் திரு.M.கிருஷ்ணசாமி ரெட்டி, தென்சென்னை மாவட்டத்தலைவர் திரு.கனிராஜா, மத்திய சென்னை தலைவர் திரு.S.வேல்முருகன், செயலாளர் திரு.S.சுப்புராஜ் ரெட்டி, விழுப்புரம் வடக்கு மாவட்டத்தலைவர் 'ஆரியாஸ்' திரு.M.ராமகிருஷ்ணன் ரெட்டி, மருத்துவர் அணி தலைவர் கோயம்புத்தூர் KTVR ஹாஸ்பிடல் உரிமையாளர் திரு.Dr.V.ஜனார்த்தனன் ரெட்டி, மதுரை மண்டல செயலாளர் திரு.K.பரமேஸ்வரன் ரெட்டி, விருதுநகர் மண்டலத்தலைவர் திரு.R.சண்முகைய்யா ரெட்டி, தஞ்சை மாவட்ட மண்டல செயலாளர் திரு.K.சூரியகுமார் ரெட்டி, தாம்பரம் சமூக சேவகர் திரு.V.R.சிவராமன் ரெட்டி, திருவண்ணாமலை செயலாளர் திரு.R.வீரமணி ரெட்டி, ஸ்ரீபெரும்புதூர் ராமானுஜர் உற்சவகமிட்டி செயலாளர் திரு.R.ஹரிகிருஷ்ணன் ரெட்டி, விளாத்திகுளம் நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.வேங்கைசந்திரசேகரன் ரெட்டி, தென்சென்னை துணைத்தலைவர் திரு.வைகோ.எஸ்.பெருமாள், வடசென்னை, தண்டையார்பேட்டை திரு.S.செல்வகுமார், இளைஞரணி நிர்வாகி MTR திரு.வரதராஜன் உள்ளிட்ட தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலரும் கலந்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் சென்னை மண்டலத்திற்குட்பட்ட மேற்கு தாம்பரம், பழையதாம்பரம், பழைய பெருங்களத்தூர், புதுபெருங்களத்தூர், இரும்புலியூர், வடசென்னை, தென்சென்னை, மத்தியசென்னை, சென்னை புறநகர் மாவட்டப் பகுதிகளிலிருந்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.



உத்தமர் ஓமந்தூர்.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் வாழ்க்கையில் நடந்த சில அரிய சந்தர்ப்பங்களையும் அவர் குறித்த புகழ் விளக்க உரையினையும் திருப்பூர் தமிழ் இலக்கியச்சங்க எழுத்தாளர் திரு.அனிதா.கு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழங்கினார்.

சென்னை மண்டலத்தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டி அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி பேசும் போது, "சென்னை மண்டலத்தில் அமைந்துள்ள 4 மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரு திட்டமிடலோடு இனி செயல்படும். தென் மாவட்டத்தில் இருந்து நமக்கெல்லாம் அடையாள மாக வாழ்ந்து மறைந்த மாமா திரு.சுந்தரராஜ ரெட்டியாரைப்போல அன்பு, அரவணைப்பு, முனைப்பு என்கிற கொள்கைகளோடு இனி சென்னை மண்டல முன்னணி ரெட்டி நலச்சங்கம் செயல்படும். வாழ்க ரெட்டி இனம், ஓங்கட்டும் ஒற்றுமை" என்றார்.

விழாவில் தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க மாநிலப் பொதுச் செயலாளர் திரு.K.ஜனகராஜன் அவர்கள் பேசும்போது, "உத்தமர் ஓமந்தூரார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழாவினை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிற சென்னை மண்டலத் தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டியார் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். செய்வதை திருந்தச்செய் என்பதற்கு சரியான உதாரணமாக விளங்குகிறார். அவர் நமது சமூகத்திற்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய நம்பிக்கை நட்சத்திரம். அவருக்கு உங்கள் அனைவரின் சார்பாக இந்த கேடயத்தை வழங்குகிறோம்.

ஓ.பி.ஆர் அவர்கள் குறுகிய காலமே முதலமைச் சராக இருந்தவர். சுதந்திர இந்தியாவிற்கு பிறகு



செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே சுதந்திர கொடியை முதன் முதலில் ஏற்றிய முதலமைச்சர் ஓ.பி.ஆர் அவர்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தை நம்முடைய தமிழகத்தின் சின்னமாக ஆக்கியவர், முதல் முதலில் கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து வைத்தவர், நியாயவிலைக்கடைகளை முதன் முதலில் ஆரம்பித்தவர், தமிழ் வளர்ச்சி கழகத்தை நிறுவியவர், பாரதியாரின் கவிதைகளை நாட்டுடமை ஆக்கியவர், பெண் அடிமைத் தனத்தை ஒழித்தவர், விவசாயிகளின் வாழ்வு தழைக்க நடவடிக்கைகள் எடுத்தவர், கோயில்களில் தேவாரமும் திருவாசகம் முழங்கச்செய்தவர் உத்தமர் ஓமந்தூரார் அவர்கள். அப்பேர்ப்பட்ட முதல்வருக்கு முழு உருவ சிலை இல்லை என்பது வெட்கப்பட வேண்டிய செயல். ஓமந்தூரார் தோட்டத்திலே உத்தமர் அவர்களுக்கு ஒருசிலை வைக்கவேண்டும் என்று கலைஞருக்கு கோரிக்கை வைத்து தொடர்ந்து ஒவ்வொரு பிறந்த நாள் விழாவிலும் நாம் அந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம். அதேபோல ஏழை எளிய குழந்தைகளின் கல்வி செலவுக்காக ஒரு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

நிகழ்ச்சியில் சிறந்த தொழிலதிபர்களுக்கும்,



கல்வி நிறுவனங்களுக்கும் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் நினைவு விருது வழங்கப்பட்டது.

தொடர்ந்து, தமிழ்நாடு ரெட்டி நல சங்க மாநிலப் பொதுச் செயலாளர் திரு.K.ஜனகராஜன், முன்னணி தலைவர் திரு.M.C.பழனிச்சாமிரெட்டி, சென்னை மண்டலத்தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டி உள்ளிட்ட நிர்வாகிகள் செய்தியாளர்களை சந்தித்தனர். அதுசமயம்,

1. உத்தமர் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம் அமைந்துள்ள வளாகத்திலோ அல்லது பிரதான இடம் ஒன்றிலோ அன்னாருடைய முழு உருவ சிலையை வைக்க வேண்டும்.
2. திண்டிவனத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு ஓ.பி.ஆருடைய பெயரை சூட்ட வேண்டும்
3. OBC சான்றிதழ் பெறுவதில் உள்ள சிக்கல்களை களைந்து உரியவர்களுக்கு OBC சான்றிதழ் கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும்
4. ரெட்டி கஞ்சம் சான்றிதழ் தமிழ்நாட்டில் தடையின்றி எல்லா பகுதிகளிலும் கொடுக்க வேண்டும் என்கிற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

சென்னை புறநகர் மாவட்டத்தலைவர் திரு.K.S.ராஜா ரெட்டி விழாவில் நிறைவேற்றப் பட்ட தீர்மான உரையினை வாசித்தார். 129வது ஆண்டு பிறந்தநாள் விழா மற்றும் குடும்ப விழாவிற்கு அலைகடலென திரண்டு வருகைத் தந்து தலைநகர் சென்னையை திரும்பி பார்க்கின்ற அளவுக்கு அயராது உழைத்து, கடுமையாக பாடுபட்டு மாபெரும் வெற்றி மாநாடாக சிறப்பித்த மண்டல தலைவர் திரு.R.ஜெயராமன் அவர்களுக்கும், செயலாளர் திரு.C.P.R.தாமோதரன் அவர்களுக்கும் மத்திய சென்னை மாவட்ட ரெட்டி நலச் சங்கம் சார்பாக கேடயம் மற்றும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

நிறைவாக சென்னை புறநகர் மாவட்டச் செயலாளர் திரு.S.V.ரமணா ரெட்டி அவர்கள் நன்றியுரை வழங்கினார். மதிய விருந்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

# திண்டிவனம் அடுத்த ஓமந்தூரில் ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாள் விழா

உத்தமர் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழா கடந்த 01.02.2024 அன்று திண்டிவனம்–பாண்டி தேசிய நெடுஞ்சாலை, ஓமந்தூர் மணிமண்டபம் அருகே நடைப்பெற்றது.

நிகழ்ச்சியில் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் திரு.இராமசீனிவாசன் ரெட்டி, திரு.வேலுச்சாமி ரெட்டி, பாண்டிச்சேரி டேக்பான் சங்கத்தின் தலைவர் திரு.M.V.வைத்தியலிங்கம்ரெட்டி, கடலூர் தென்னிந்திய ரெட்டி நலச்சங்க செயலாளர் திரு.M.ரவிச்சந்திரன், மதுரை திரு.பட்டாபி ரெட்டியார், வடசென்னை திரு.சீனி (எ) ராமசாமி, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் திரு.ஜெயப்பிரகாஷ், திரு.M.தர்மசிவம் ரெட்டி, திரு.ஸ்ரீதர் ரெட்டி, திரு.K.V.முத்துமல்லா ரெட்டி, திரு.V.ரவிச்சந்திரன் ரெட்டி, திண்டுக்கல் திரு.ராஜ்மோகன் ரெட்டி, மும்பை திரு.S.பிரபாகர் ரெட்டி, விழுப்புரம் திரு.N.ரமணன்ரெட்டி, அனுாஜ் டைல்ஸ் உரிமையாளர் திரு.குமார் ரெட்டியார், விழுப்புரம் வடக்கு மாவட்டம் திரு.J.குமார் ரெட்டியார், இளைஞரணி நிர்வாகிகள் பலரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழுப்புரம் மாவட்டம் மற்றும் திண்டிவனம் வட்டார ரெட்டி நலச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்கள், இன சொந்தங்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் திரு.இராம சீனிவாசன் ரெட்டி அவர்கள் பேசும்போது, “ரெட்டியார்கள் வாழ்க, ரெட்டி இனம் வாழ்க, ஜெய்ஸ்ரீராம் என கோஷமிட்டு தமது உரையினை தொடங்கினார். ஸ்ரீராமன் வழியில் வந்தவர்கள் நாம். நம் சமூகத்தில் இராமசாமி,



இராமகிருஷ்ணன், இராமச்சந்திரன் என பல பெயர்கள் கொண்டவர்களை நாம் பார்க்கிறோம். ரெட்டியார் சமுதாயம் பிற சமுதாயங்களுடன் நட்பாக வாழ்ந்து வருகிறது. ஆனால் தற்போது புதிதாக வந்தேரிகள் என சிலர் நம் சமுதாயத்தை பேசுவதை பார்க்கிறோம். யார் வந்தேரிகள்? நாங்கள் தமிழர் இல்லையென்றால் யார் தமிழர்? முதன் முதலில் தமிழை பயிற்று மொழியாக்க வேண்டும் என சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள் கூட்டத்தில் முன் மொழிந்தவர் திரு.ஆரோக்கியசாமி ரெட்டியார். தமிழுக்கென்று அகராதியையும், கலைக்களஞ்சியத்தையும் உருவாக்கியவர் ஐயா ஓமந்தூரார். இத்தனை பெருமைக்குரிய சமுதாயம் ரெட்டியார் சமுதாயம். தற்போது சாதியக் கொள்கைகள் குறித்து பல தவறான புரிதல்கள் ஏற்பட்டுள்ளது. சாதியையும், அரசியலையும் பிரிக்க முடியாது. பல அரசியல் தலைவர்கள் பெயர்களுக்கு பின்னால் சாதியின் பெயர் இடம்பெற்றிருக்கிறது. உதாரணமாக கருப்பையா மூப்பனார், முத்துராமலிங்க தேவர், வ.வே.சு.ஐயர் போன்றவர்கள் எல்லாம் சாதியின் அடையாளத்தை சொல்ல தயங்கியது இல்லை. அப்படியிருக்க சாதியை ஒரு அடையாளமாக கொள்ளவேண்டுமே தவிர தவறாக புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

பிஜேபி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு 10% EWC இடஒதுக்கீடு சட்டத்தை காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர் கட்சிகளும் ஆதரித்து மத்திய அரசால் சட்டமாக்கப் பட்டது. அதனை பல்வேறு மாநிலங்கள் இன்று நடைமுறைப்படுத்தியுள்ளது. தமிழக அரசு நமது மாநிலத்திலும் இதனை அமல்படுத்தவேண்டும் என இந்த நேரத்தில் இந்த நிகழ்ச்சியின் மூலம் கோரிக்கை வைக்கிறேன். இதனால் தமிழகத்தை பொறுத்தவரை ரெட்டியார் சமுதாயம் பெருமளவில் பயன்பெறும். நம் பிள்ளைகள் கல்வி, வேலை வாய்ப்பில் இடம்பெறுவார்கள்” என்றார்.



நிகழ்ச்சியில் தமிழ்நாடு ரெட்டி நலசங்கம் சார்பில் மாநில துணைத்தலைவர் திரு.P.ரவிரெட்டி அவர்கள் பேசும்போது, “தொடக்கக்காலத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ரெட்டி நலச்சங்கத் தலைவர் திரு.விவேகானந்தன் ரெட்டி அவர்கள் மட்டுமே ஆண்டுதோறும் ஓ.பி.ஆர் மணிமண்டபத்திற்கு வருகை தந்து உத்தமர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து வந்தார். 2016ல் ஒரு முறையும் 2018ல் ஒருமுறையும் என மாநாடுகளை நடத்தியிருக் கிறோம். இனி ஆண்டுதோறும் காலையில் இவ்விடத்தில் ஓ.பி.ஆர் பிறந்தநாள் விழாவும், மாலையில் பொதுக்குழுவும் நடைபெறும். நாம் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்பதை உணர்ந்து நம் நடவடிக்கைகள் அமைய வேண்டும்” என்றார்.



தொடர்ந்து கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டது.

1. பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இடம் பெறும் வகையில் (EWS) உரியசான்றிதழ் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ரெட்டி நலச் சங்க மாநில அமைப்பை முறைப்படுத்த கடந்த ஆண்டு 2023 நிறைவேற் றப்பட்ட தீர்மானத்தை அமல்படுத்த காஞ்சிபுரம் ரெட்டி நல சங்கத்தலைவர் திரு.D.விவேகானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும். இதில் வேலூர் தலைவர் திரு.C.கோகுல்தாஸ், சென்னை திரு.G.பாலகுரு, தூத்துக்குடி மாவட்டத் தலைவர் திரு.S.பெத்துராஜ், விழுப்புரம் திரு.ரமணரெட்டி, திண்டுக்கல் திரு.ராஜ்மோகன் ரெட்டி, திருவாங்கூர் தேவஸ்தான டிரஸ்ட் உறுப்பினர் திரு.ஸ்ரீதர் ரெட்டி, திருப்பூர் தொழிலதிபர் திரு.V.இளங்கோவன், இளைஞரணி நிர்வாகிகள் திரு.A.L.ராஜா, திரு.அருண்பாஸ்கர் ஆகியோர் இடம்பெறுவர்.
3. சென்னையில் ஓமந்தூரார் அவர்களின் திருஉருவச்சிலையை அமைக்க வலியுறுத்துகிறோம்.
4. சென்னையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டம் அருகில் அமைந்துள்ள மெட்ரோ ஸ்டேஷனுக்கு "ஓமந்தூரார் மெட்ரோ ஸ்டேஷன்" என பெயரிட தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நிறைவாக இளைஞரணி நிர்வாகிகள் திரு.ரவிரெட்டி அவர்களுக்கு மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இறுதியில் செஞ்சி வட்டார பொறுப்பாளர் அணையேரி திரு.ரவிரெட்டி நன்றி தெரிவித்தார்.

## வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை

- அரண்மனையாக இருந்தாலும் அழைக்காமல் செல்லாதே.....
- அருமைதெரிந்தவர்கள் வீட்டில் பெருமை பேசாதே...
- மனம்திறந்து பேசலாம், மனதில் பட்டதை எல்லாம் பேசாதே...
- தோல்வியில் இருந்து எதையும் கற்றுக் கொள்ளாதது தான் உண்மையில் தோல்வி...
- ஒரு மனிதன் விழாமல் வாழ்வது பெருமை அல்ல விழுந்த போது எழுந்தான் என்பதே பெருமை...
- உளிபடாத கற்கள் சிலையாவதில்லை உழைப்பில்லாத கனவு நனவானது இல்லை...
- இழந்ததை மறந்துவிடுங்கள், அப்பொழுதுதான் எதிர்காலம் இனிமையாகும்

## திமிரி ஒன்றியம் காவனூரில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் 129வது பிறந்த நாள் விழா

ராணிபேட்டை மாவட்டம், திமிரி ஒன்றியம் காவனூர் கிராமத்தில் கடந்த 01.02.2024 சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் 129–வது பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ராணிப்பேட்டை மாவட்ட ரெட்டி நலச்சங்கத்தின் சார்பில் காவனூர் நிழற்கூடம் அருகே நடைபெற்ற இவ்விழாவிற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் திரு.S.பெருமாள் ரெட்டி தலைமை தாங்கி ஓமந்தூரார் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் திமிரி ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**எந்த ஒரு செயலையும் ஆர்வம் குறையாமல் செய்தால் நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி நம்மை தேடி வரும்.**

**- ஐன்ஸ்டீன்**

# திருச்சியில் திரு.P.ஜெய்பிரகாஷ் அவர்களின் முதல் நான்கு நூல்கள் வெளியீடு



கடந்த 24.02.2024 அன்று திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் திரு.P.ஜெய்பிரகாஷ் அவர்களின் முதல் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. சாரல் பதிப்பகம் இதனை முன்னெடுத்து நடத்தியது.

நிகழ்ச்சிக்கு அஜந்தா ஹோட்டல் நிர்வாக இயக்குனர் திரு.A.வேணுகோபால் அவர்கள் தலைமை வகித்தார். தொகுப்பாசிரியர் திரு.P.ஜெய்பிரகாஷ் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

“கண்டுபிடிப்புகளின் வரலாறு” என்ற நூலின் முதல் பிரதியினை திருச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (ஓய்வு) திரு.R.முத்துகிருஷ்ணன் M.A. M.Sc. M.Sc., அவர்கள் வெளியிட பேராசிரியர் திரு.Dr.N.பரமசிவம் M.D. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

“உலக சிறப்புகள் வரலாறு” என்ற நூலினை திரு.V.செல்வராஜு அவர்கள் வெளியிட திருச்சி பனானா லீஃப் உரிமையாளர் திரு.R.மனோகரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

“உலக சிறப்புகள் வரலாறு” என்ற நூலினை கே.ஆர்.டி. கேரியர் அகாடமி இயக்குனர் திரு.V.செல்வராஜு அவர்கள் வெளியிட்டு பேசும் போது, “உலகின் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உயரமான மலைகள், உயரமான இடங்கள் அனைத்தும் கடல் மட்டத்திலிருந்து இத்தனை அடி உயரம் என கணக்கிடுவதற்கு அளவுகோலாக உள்ள இடம் இங்கிலாந்து நாட்டின் லிவர்பூர் என்பதை புள்ளிவிவரத்துடன் இந்நூலில் தொகுப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8848 அடி என கணக்கிடப் பட்டதை புள்ளிவிவரத்துடன் குறிப்பிட்டும், உலகில் முதலில் சூரிய உதயமாகும் நாடு ஆஸ்திரேலியா கண்டத்தில் உள்ள கிரிபடித்தீவு நாடு எனவும் குறிப்பிட்டுள்ளார். அரிய பல தகவல்கள் அனைத்தும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இது போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வின் போது பயன்படும் என தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்”.

“சாதித்த பெண்களின் வரலாறு” என்ற நூலினை திருச்சி காவேரி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி.வெ.சுஜாதா அவர்கள் வெளியிட J.R.பாலிடெக்னிக் தாளாளர் முனைவர் திருமதி.L.N.கல்பனா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

“சாதித்த பெண்களின் வரலாறு” என்ற நூலினை திருச்சி காவேரி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி.வெ.சுஜாதா அவர்கள் வெளியிட்டு பேசும்போது, “ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு பின்னால் ஆண்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். நான் பல உதாரணங்களை சொல்ல முடியும். காவேரி கல்லூரியில் நான் எடுக்கும் ஒவ்வொரு முடிவிற்கும் அறங்காவலர்கள் முழு சுதந்திரம் தந்ததால் தான் வெற்றி பெற முடிந்தது” என்றார்.

“வரலாறு படைத்தோரின் வரலாறு” என்ற நூலினை திருச்சி ஜோசப் கல்லூரி முன்னாள் பேராசிரியர் திரு.சா.பாப்பு பெஞ்சமின் இளங்கோ அவர்கள் வெளியிட திருச்சி தேசியக்கல்லூரி முன்னாள் துணை முதல்வர் திரு.பா.ராகவன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் வழக்கறிஞர் திரு.M.நல்லையம் பெருமாள், திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு.வை.ஜவஹர் ஆறுமுகம், சி.இ. மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு.M.ஜேம்ஸ், புத்தக விநியோகஸ்தர் BPL திரு.M.ஜெயராமன், பத்திரிக்கையாளர் திரு.R.வளையாபதி, கீரனூர் காவேரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் உரிமையாளர் திரு.Er.S.புண்ணியமூர்த்தி, பிரபல இருதய நோய் மருத்துவர் டாக்டர்.செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் திருச்சி நகர மற்றும் கிளை ரெட்டி நலச் சங்க நிர்வாகிகள், நாமக்கல் நகர சங்க செயலாளர் திரு.R.அன்பழகன் உள்ளிட்ட பலரும் கலந்துக் கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்

நிகழ்ச்சியில் திருச்சி இன்ஸ்டன்ட் பிரிண்டர்ஸ் திரு.J.ஜவஹர் ஜெயசீலன், ஜோதிடர் திரு.B.தாமரைச்செல்வன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் தொகுப்பாசிரியர் திரு.ப.ஜெய்பிரகாஷ் அவர்கள் நன்றி தெரிவிக்கும் போது சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார். அதுசமயம் இன்று வெளியிடப்பட்ட நான்கு நூல்களையும் பல்வேறு பகுதியில் இருந்து வருகை தந்த நண்பர்கள், கல்லூரி நூலகர்கள், நிறுவனங்கள் தம்மிடம் உள்ள மாணவர்கள் படித்து பயன்பெற நூல்களை வாங்கி ஊக்கப்படுத்தியத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.



# ஓ.பி.ஆர் அவர்கள் பிறந்தநாள் விழா குறித்த மாநில தலைவர் அறிக்கை



மாநிலத் தலைவர்
திரு.G.ரெங்கநாதன்

**தேதி : 29.01.2024**

**அன்புடையீர் வணக்கம்,**

தமிழ்நாடு ரெட்டி நலச்சங்க மண்டல, மாவட்ட மற்றும் உறுப்பினர்கள், உறவுகள் அனைவருக்கும் என் அன்பான வேண்டுகோள்.

பிப்ரவரி 1, 2024 நம்முடைய உத்தமர் ஓ.பி.ஆர் அவர்களின் 129வது பிறந்தநாளை திண்டிவனம் மற்றும் சென்னையில் விழாவாக கொண்டாடு கிறார்கள். அதே போன்று மாவட்டம், தாலுகா மற்றும் அனைத்து ஊர்களிலும் அவர் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்பான முறையில் கொண்டாட வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள். விழாவாக நடத்துவதற்கு எனது வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உத்தமர் ஓ.பி.ஆர் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடும் மாநில, மாவட்ட ரீதியாக யார் சிறப்பாக செய்தாலும் நம் சொந்தங்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம்.

இப்படிக்கு,
திரு.G.R.ரெட்டி,
மாநிலத் தலைவர்
தமிழ்நாடு ரெட்டி நலச் சங்கம்

கடந்த 29.01.2024 அன்று மாநிலத் தலைவர் அவர்கள் ஓமந்தூராரின் 129வது பிறந்தநாள் விழா குறித்து சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு விடுத்த அறிக்கை

# திருச்சி மாநகர ரெட்டி நலச்சங்கம்

## உத்தமர் ஓபிஆர் அவர்களின் பிறந்த நாள் விழா, ஐயா KRT அவர்களின் நினைவு நாள் விழா



தலைவர்
திரு.S.புண்ணியமூர்த்தி



செயலாளர்
திரு.A.ராஜாசிதம்பரம்



பொருளாளர்
திரு.A.கார்த்திக்

உத்தமர் ஓமந்தூர் P.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழா மற்றும் ஐயா K.R.T அவர்களின் நினைவு நாள்விழா கடந்த 01.02.2024 வியாழக்கிழமை காலை 10 மணி அளவில் ரெட்டி நல டிரஸ்ட் கட்டட வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திருச்சி மாநகர சங்கத்தலைவர் திரு.S.புண்ணியமூர்த்தி அவர்கள் முன்னிலையில் திருச்சி ரெட்டி நல டிரஸ்ட் தலைவரும், திருச்சி மாவட்ட சங்கத்தலைவரும், தமிழ்நாடு மாநில சங்கப் பொருளாளருமாகிய திரு.A.வேணுகோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு.S.புண்ணியமூர்த்தி அவர்களின் வரவேற்புரை நிகழ்வுடன் விழா தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.G. ரெங்கநாதன் ரெட்டி அவர்களும் மற்றும் திருச்சி ரெட்டி நல அறக்கட்டளை தலைவர் திரு.A.வேணுகோபால் ரெட்டியார் அவர்களும் முதலில் ஓமந்தூர் P.ராமசாமி ரெட்டியார் மற்றும் KRT ஐயா அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலைகள் அணிவித்து சிறப்பித்தார்கள்.

நிகழ்ச்சியில் கொடைவள்ளல் K.R.T ஐயா அவர்களின் திருஉருவப்படத்திற்கு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதுசமயம் திரு.M.ஜெயராமன் (BPL), திரு.K.R.சுரேஷ்குமார், திரு.பூபதி, திரு.ரவிச்சந்திரன் மற்றும் ரெட்டி நல டிரஸ்ட் அறங்காவலர் களும், கிளைச்சங்க பொறுப்பாளர்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் உறையூர் கிளை பொருளாளர் திரு.C.ரவிச்சந்திரன் மற்றும் நெம்.1 டோல்கேட் சங்கத்தலைவர் திரு.R.மதிவாணன் அவர்களும் OPR மற்றும் KRT ஆகிய இருவரின் பெருமைகளை விளக்கமாக எடுத்துக்கூறினார்கள்.

சென்ற டிசம்பர் மாதத்தில் கணபதி நகர் திரு.S.ராமதாஸ் அவர்கள் தாமாகவே முன்வந்து திருச்சி ரெட்டி நல டிரஸ்ட்டுக்கு ரூபாய் ஐந்து லட்சம் நன்கொடை அளித்துள்ளதை தலைவர் திரு.S.புண்ணியமூர்த்தி அவர்கள் பாராட்டினார்கள்.

திருச்சி மாநகர சங்கம் செயலாளர் திரு.A.ராஜா சிதம்பரம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் திரு.A.வேணுகோபால் அவர்கள் இனிப்பு, காரம் மற்றும் காபி வழங்கினார்கள்.

# அரிமா சங்கம் சார்பில் திரு.G.V.மார்க்கண்டேயன் MLA அவர்களுக்கு இயற்கையின் பாதுகாவலர் விருது



விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் எம்எல்ஏ அவர்களுக்கு அரிமா சங்கம் சார்பில் இயற்கையின் பாதுகாவலர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

பன்னாட்டு அரிமா இயக்கம், சென்னை அரிமா மாவட்ட சாம்பியன்ஸ் மண்டல மாநாடு சென்னை அரும்பாக்கம் தனியார் அரங்கில் நடைபெற்றது. அரிமா திரு.பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் மரக்கன்று நடுவது, இயற்கையை பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு செயல்பாட்டின் காரணமாக "இயற்கையின் பாதுகாவலர்" வாழ்நாள் சாதனையாளர் விருது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் எம்எல்ஏ அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் வைப்பாற்றின் கரை ஓரம் இருந்த சீமை கருவேல மரங்களை தனது சொந்த முயற்சியில் அகற்றி பயன்தரும் மர கன்றுகளை நட்டு பராமரித்து வருவது, விளாத்திகுளம்–எட்டயபுரம் சாலையில் இருபுறங்களிலும் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி விட்டு மக்களுக்கு பயன்தரும் மரங்களை நட்டு பராமரித்தல், விளாத்திகுளம் தொகுதியை பசுமையான பகுதியாக மாற்றுவதற்காக **"மரங்கள் மக்கள் இயக்கம்"** தொடங்கி தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் பொது இடங்களில் சீமை கருவேல மரங்களை அகற்றி பயன்தரும் மரங்களை நட்டுப் பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்ததற்காக அரிமா சங்கம் சார்பில் "இயற்கையின் பாதுகாவலர்" என்கிற வாழ்நாள் சாதனை யாளர் விருதினை திமுக தலைமை செயற்குழு உறுப்பினர், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் எம்எல்ஏ அவர்களுக்கு அரிமா சங்க மாவட்ட பொறுப்பு ஆளுநர் திரு.வரதராஜன் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து திரு.G.V.மார்க்கண்டேயன் அவர்கள் பேசுகையில், "விளாத்திகுளம் தொகுதியை பசுமையான தொகுதியாக மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் மரங்கள் மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டு பொதுமக்கள், சமூகசேவகர்கள், மாணவர்கள், விவசாயிகள், அரசு அதிகாரிகளின் ஆதரவுடன் பொது இடங்களில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மக்களுக்கு பயன்தரும் பல்வேறு மரக்கன்றுகள் நட்டு பராமரித்து வருகிறோம்.

விளாத்திகுளம் தொகுதியில் 1 கோடி மரக்கன்று என்ற இலக்கை அடைவதற்கு அரிமா சங்கம் போன்ற தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் அரிமா சங்க முன்னாள் ஆளுநர்கள் திரு.முகமது நவீன், திரு.ராஜசேகர், துணை ஆளுநர் திரு.போஸ், மாவட்டத் தலைவர் திரு.செல்வகுமார் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**எண்ணம் உறுதியாக இருந்தால், எண்ணியபடி உயரலாம்! நமது எண்ணம் தான் நம்முடைய எதிர்காலத்தை உருவாக்குகிறது**

## வாடிப்பட்டியில் உத்தமர் ஓமந்தூரார் 129வது பிறந்தநாள் விழா

கடந்த 03.02.2024 அன்று வாடிப்பட்டியில் தமிழகத்தின் முதல் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. தி.மு.க. ஒன்றிய செயலாளர் திரு.பாலராஜேந்திரன், பேரூராட்சி தலைவர் திரு.பால்பாண்டி ஒன்றிய துணைத் தலைவர் திரு.கார்த்திக், கவுன்சிலர் திரு.ஜெயகாந்தன், அ.தி.மு.க.நிர்வாகி திரு.ராஜேந்திரன், பா.ஜ.க மண்டல தலைவர் திரு.சேதுராமன், காங்கிரஸ் வடக்கு மாவட்ட துணைத் தலைவர் திரு.செல்வகுமார், நகரத் தலைவர் திரு.முருகானந்தம், தே.மு.தி.க., பேரூராட்சி கழக செயலாளர் திரு.பாலாஜி, பொருளாளர் திரு.சோமநாதன், நாம் தமிழர் ஒன்றிய செயலாளர் திரு.மகேந்திரன், மூ.மு.க. மாநில பொருளாளர் திரு.நாகராஜன், வி.சி.க. பேரூராட்சி செயலாளர் திரு.அரசு, ஒன்றிய வாடிப்பட்டி ரெட்டி நலச்சங்க ஒருங்கிணைப் பாளர்கள் திரு.குணசேகரன், திரு.பாப்பையன் ஆகியோர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# துறையூர் நகர ரெட்டி மகளிர் அணி - மகளிர் தின கொண்டாட்டம் 2024




கடந்த 10.03.2024 அன்று துறையூர் நகர ரெட்டி நலச்சங்கம் மகளிர் அணி சார்பாக மகளிர் தின விழா கொண்டாட்டம் - 2024 துறையூர் பஸ் நிலையம் அருகில் உள்ள O.N.மஹாலில் சிறப்பாக கொண்டப்பட்டது.

இறைவணக்கத்துடன் தமிழ் தாய் வாழ்த்து பாடி, குத்து விளக்கினை ஏற்றி வைத்து நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

துறையூர் நகர ரெட்டி நலச்சங்கம் மகளிர் அணி தலைவி திருமதி.V.உமாமகேஸ்வரி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று நடத்தினார். செயலாளர் திருமதி.C.விஜயா அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி ஸ்ரீ சக்தி மருத்துவமனை டாக்டர் திருமதி.Dr.சுமதி MBBS, MBA, DOG (London) அவர்கள் கலந்து கொண்டார்.

பெரம்பலூர் Dr.முத்துலெட்சுமி ரெட்டி மகளிர் நற்பணி மன்றத்தலைவி திருமதி.மல்லிகா ஜெயராமன் அவர்கள் சிறப்பு பேச்சாளராக அழைக்கப் பட்டிருந்தார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறையூர் நகர ரெட்டி நலச்சங்கம் மகளிர் அணி தலைவி திருமதி.V.உமாமகேஸ்வரி, செயலாளர் திருமதி.C.விஜயா, பொருளாளர் திருமதி.S.பாரதி, திருமதி.J.சுஜாதா, திருமதி.N.மேகலா சிறப்பாக செய்திருந்தனர்.

பொருளாளர் திருமதி.S.பாரதி வந்திருந்த அனைவருக்கும் நன்றி உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர் அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகள், தனித் திறமை போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் என விழா சிறப்பாக நடைபெற்றது.

இறுதியாக நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவடைந்தது.

# விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்



கடந்த பிப்ரவரி 4ம் தேதி ஞாயிற்றுக்கிழமை விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ரெட்டி ஜன சங்கத்தின் 17 முன்னாள் தலைவர்கள் திருவுருவப்படங்கள் நமது ரெட்டி இன பெரியவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

இந்த இனிய நிகழ்வில் முன்னாள் ரெட்டி ஜன சங்கத்தின் தலைவர் தொழிலதிபர் திரு.R.ராஜகோபால் ரெட்டியார் அவர்கள், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்க்கண்டேயன் MLA, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.N.K.பெருமாள் திரு.O.S.ரகுபதி உமாமகேஸ்வரி, பணி நிறைவு நீதி அரசர் திரு.எஸ்.சரவணப்பெருமாள், ராம்கோ சிமெண்ட் முன்னாள் துணைத்தலைவர் ஆடிட்டர் திரு.S.சரவணப்பெருமாள், ரெட்டி ஜன சங்கத்தின் தணிக்கையாளர் ஆடிட்டர் திரு.என்.சுதாகரன், விளாத்திகுளம் பேரூராட்சி தலைவர் திரு.எஸ்.சூர்யா அயன்ராஜ், விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தலைவர் திரு.N.K.P.வரதராஜ பெருமாள், திண்டுக்கல் பேராசிரியை திருமதி.காந்திமதி சரவண பெருமாள், ராமச் சந்திரபுரம் வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சீதாராமன், கோவில்பட்டி துறையூர் பணி நிறைவு தலைமை ஆசிரியர் திரு.பி.சின்னுரெட்டி, வேலூர், காட்பாடி தொழிலதிபர் திரு.கேசவன் மற்றும் கோவில்பட்டி, சாத்தூர் ஆகிய வட்டாரங்களின் ரெட்டியார் சமூக உறவுகள், விளாத்திகுளம் நகர, வட்டார ரெட்டியார் சமூக உறவுகள் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில் கலந்துக் கொண்ட அனைவரையும் ரெட்டி ஜன சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர், ரெட்டி ஜன சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள், ரெட்டி ஜன சங்க பணியாளர்கள், பள்ளிகளின் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் வரவேற்று சிறப்பித்தார்கள்.

# பெரம்பலூர் மாவட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகளிர் நற்பணி மன்றம் - மகளிர் தினவிழா




பெரம்பலூர் மாவட்ட டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகளிர் மன்றத்தின் சார்பில் மகளிர் தின விழா கடந்த 09.03.2024 சனிக்கிழமை அன்று மிக கோலாகலமாக நடைபெற்றது. வீரமங்கை கல்பனா சாவ்லா விருது பெற்ற திருமதி.முத்தமிழ்செல்வி அவர்கள் கௌரவ விருந்தினராகவும், தனலட்சுமி மருத்துவக் கல்லூரியில் உதவி பேராசிரியர் டாக்டர்.நிவேதா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகளிர் நற்பணி மன்றத்தின் தலைவி திருமதி.மல்லிகா ஜெயராமன் அவர்கள் தலைமை உரையுடன் விழா இனிதே துவங்கியது.

தனலட்சுமி ஸ்ரீனிவாசன் குழுமத்தின் செயலாளர் திரு.நீல்ராஜ் அவர்களின் துணைவியார் திருமதி.ஜெயந்தி நீல்ராஜ், பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நல சங்க தலைவர் அஸ்வின்ஸ் திரு.K.R.V.கணேசன் அவர்களின் துணைவியார் திருமதி.குமாரிகணேசன், திருமதி.முத்தமிழ்செல்வி, திருமதி.Dr.நிவேதா, திருமதி.மல்லிகா ஜெயராமன் அவர்கள் குத்து விளக்கேற்ற மகளிர் தினவிழா சிறப்புடன் துவங்கியது.

வரவேற்பு நடனம், கவிதை மற்றும் சிலம்பாட்டம் போன்ற நிகழ்வுகள் விழாவிற்கு மேலும் அழகு சேர்த்தன. வீரமங்கை திருமதி.முத்தமிழ் செல்வி பல சோதனைகளைக் கடந்து சாதனை படைத்த எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியைத்தொட்ட நிகழ்வினை எடுத்துரைத்ததின் மூலம் பல மகளிரையும் சாதனை படைக்க தூண்டுகோலாக இருந்தார். 'அறிவோம் மருத்துவம்' சிறப்புரையில் பெண்களின் மருத்துவம் சார்ந்த பல சந்தேகங் களுக்கு தனது உரையின் மூலம் திருமதி.Dr.நிவேதா அவர்கள் பதில் அளித்தார். பல்வேறு விதமான விளையாட்டுகளை மகளிர் விளையாடி மகிழ்ந்தனர். விழாவின் நிறைவாக முத்துலட்சுமி ரெட்டி மகளிர் மன்றத்தின் செயலாளர் திருமதி.சித்ரா புகழேந்தி நன்றி உரை ஆற்றினார்.

## ஓமந்தூரார் பிறந்தநாள் விழாவுக்கு அழைப்பு



உத்தமர் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள அ.இ.அ.தி.மு.க பொதுசெயலாளரும் முன்னாள் முதல்வருமான திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களை நேரில் சந்தித்து தமிழ் நாடு ரெட்டி நலச் சங்க மாநில துணைத் தலைவர் திரு.P.ரவி ரெட்டி அவர்கள் அழைப்பு கடிதத்தை வழங்கினார்.

அதுசமயம் காஞ்சிபுரம் மாவட்ட ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.D.விவேகானந்த ரெட்டி, திரு.S.மணிவண்ணன் ரெட்டி, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் திரு.B.S.ஜெயப்பிரகாஷ் ரெட்டி, வடசென்னை மாவட்ட ரெட்டி நலச்சங்க நிர்வாகி திரு.சீனி (எ) ராமசாமி ரெட்டி ஆகியோர் உடன் இருந்தனர்...

## திருவண்ணாமலை ரெட்டி நலச் சங்கம் சார்பில் ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாள் விழா



மறைந்த முன்னாள் சென்னை மாகாண முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் 129வது பிறந்த நாள் விழா, கஞ்சம் ரெட்டி, போங்கநாடு ரெட்டி நலச்சங்கம் மற்றும் திருவண்ணாமலை பண்ட ரெட்டியார் நலச்சங்கம் சார்பில், திருவண்ணாமலை காந்தி சிலை அருகே நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, அங்கு அலங்கரித்து வைக்கப்பட் டிருந்த ராமசாமி ரெட்டியார் படத்துக்கு, மாவட்ட தலைவர் திரு.தனகோட்டி மற்றும் வர்த்தக சங்க தலைவர் திரு.மண்ணுலிங்கம் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து ஓ.பி.ராமசாமி ரெட்டியார் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் பணிகள் குறித்து எக்ஸ்னோரா திரு.இந்திரராஜன் அவர்கள் விளக்கினார். நிகழ்ச்சியில், கௌரவத்தலைவர் அக்ரி திரு.பழனிவேல், துணைத்தலைவர்கள் திருமதி.ஜெயலட்சுமி வெங்கடேசன், திரு.ராஜேந்திரன், செயலாளர் திரு.குமார், பொருளாளர் திரு.விஜயராஜ், தண்டராம்பட்டு ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.ரங்கநாதன், நிர்வாகி திரு.ராமநாத், திரு.கருணாகரன், திரு.பன்னீர்செல்வம், திருவண்ணாமலை பண்ட ரெட்டியார் நலச் சங்க தலைவர் ஆடிட்டர் திரு.பிரபாகரன், எஸ்.டி.எம்.எஸ்.பஸ் அதிபர் திரு.கோபால், மாவட்ட ரெட்டி நலச்சங்க பொருளாளர் திரு.பூதேவன், நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.சீனுவாசன், பொருளாளர் திரு.விஜயராஜ், இணைச்செயலாளர் திரு.வேலு, திருவண்ணமலை யூனியன் துணைத்தலைவர் திரு.ரமணன், வாசகர் வட்ட தலைவர் திரு.வாசுதேவன், திரு.குப்பன், திரு.வெங்கடேச பெருமாள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## திரு.க.சதீஷ்குமார் அவர்களுக்கு “தூயதமிழ் பற்றாளர் விருது”






கடந்த 07.03.2024 அன்று சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பாக தமிழ்நாடு அரசின் தூய தமிழ் பற்றாளர் விருது–2023 மாண்பமை தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர், அரசு செயலாளர், தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முன்னிலையில் மல்லம்பட்டி மண்ணின் மைந்தன் திரு.க.சதீஷ்குமார் அவர்கள் பெற்றுள்ளார்.

இந்த விருதினை பெற்ற திரு.க.சதீஷ்குமார் அவர்களுக்கு ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அண்ணாமலை கவிராயர் அவர்களின் 133வது ஆண்டு நினைவு தின விழா




கடந்த 09.02.2024 அன்று தென்காசி மாவட்டம், சென்னிகுளத்தில் கவிராயர் அண்ணாமலை ரெட்டியார் அவர்களின் 133வது ஆண்டு நினைவு தினவிழா நடைபெற்றது.

காவடிச்சிந்து, ஊற்றுமலை தனிப்பாடல் திரட்டு, கோமதி அந்தாதி, நவநீதகிருஷ்ணசாமி பிள்ளைத் தமிழ் வீரைச்சிலேடை வெண்பா, சீட்டுக்கவிகள் முதலிய நூல்களை இலக்கண, இலக்கிய மணங்கமழும்படி பாடியருளிய சிந்துக் கவி பேரரசு அண்ணாமலை கவிராயரின் 133–வது ஆண்டு நினைவு தினவிழா சென்னிகுளம் அண்ணாமலை கவிராயர் நினைவிடத்தில் 9ம் தேதி நடைபெற்றது.

அன்று காலை 6 மணிக்கு கணபதி ஹோமம் மற்றும் தேவரா வாசிப்பு நடைபெற்றது. காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது. காலை 9 மணிக்கு மேல் அண்ணாமலை கவிராயருக்கு மகா அபிஷேகம் அலங்கார தீபாராதனை, கவிராயரின் சிலைக்கு மாலை அணிவித்தல் நடைபெற்றன. காலை 10 மணிக்கு இயல் அவை நடைபெற்றது. மதியம் 2 மணிக்கு பள்ளிக் குழந்தைகளுக்கான காவடிச்சிந்து பாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. மாலை 3.30 மணி முதல் நாடகப்புகழ் அரியநாயகிபுரம் நகுலன் தலைமை யில் இசை அவை, மாலை 5.30 மணிக்கு விளாத்திகுளம், கவியரசர் அண்ணாமலை ரெட்டியார் நினைவு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் கலை நிகழ்ச்சி, இரவு 8 மணிக்கு மதுரை சத்குரு சங்கீத வித்யாலயம் இசைக் கல்லூரி மாணவர்கள் காவடிச்சிந்து இசை நிகழ்ச்சி மற்றும் பரத நாட்டியமும் நடைபெற்றன.

ஓய்வுப்பெற்ற உதவி தொடக்கக்கல்வி அலுவலர் திரு.சென்னப்பன் அவர்கள் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை கோவில்பட்டி கே.ஆர். நகர், லெட்சுமி அம்மாள் பாலிடெக்னிக், நேஷனல் பொறியியல் கல்லூரி மற்றும் கே.ஆர். அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி சேர்மன் திருமதி.சென்னம்மாள் ராமசாமி, சென்னிகுளம் ஊர் பொதுமக்கள் ஆகியோர் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.


## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

தொலைபேசி : ..................................................................

நான் இத்துடன் ............ வருட சந்தா / 15 வருட சந்தா தொகை ரூ...................... டிடி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

**ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE **4962**

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

**For 2022 Batch**
95% Placement

**For 2023 Batch**
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



## NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council 4 STAR RATING
- nirf Rank - 169
- DST - FIST Sponsored
- Accredited with grade A NAAC
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

### FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, TESSOLVE, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite Constructions, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

## Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in. www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

**COURSES OFFERED**

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

## K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


**COURSES OFFERED**

**UG**
B.A. - English
B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

**PG**
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

## KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்


எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்


| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7241 | 22.02.1992 | B.Sc., MBA | சித்திரை | Officer in DBS Bank | Rs.8.4 Lakhs / PA |
| 2 | G 7242 | 13.11.2000 | B.E. | ரோகிணி | Program Analyst | Rs.4 Lakhs / PA |
| 3 | G 7243 | 21.05.1996 | M.Tech. | திருவாதிரை | Lecturer | Rs.60,000/- PM |
| 4 | G 7244 | 18.03.1997 | B.E. MBA | புனர்பூசம் | Private Sector | Rs.12 Lakhs / PA |
| 5 | G 7245 | 15.03.2001 | B.Sc. M.Sc. | அனுஷம் | —— | —— |
| 6 | G 7246 | 10.10.2000 | B.Com. MBA | சதயம் | —— | —— |
| 7 | G 7247 | 07.11.1999 | B.E. | சுவாதி | Software Developer | Rs.8 Lakhs / PA |
| 8 | G 7248 | 06.11.1996 | B.Tech. | உத்திரம் | Singapore | Rs.4.5 Lakhs / PM |
| 9 | G 7249 | 28.07.1999 | B.Com. MBA | உத்திராடம் | —— | —— |
| 10 | G 7250 | 08.08.1991 | B.E. MS. | புனர்பூசம் | Canada | Rs.5 Lakhs / PM |
| 11 | G 7251 | 16.08.1996 | M.B.B.S. M.S. | பூரம் | Doctor | Rs.50,000/- PM Stipend |
| 12 | G 7252 | 28.08.1999 | M.A. MBA | பூரட்டாதி | Barclays Global Service Centre | Rs.30,000/- PM |
| 13 | G 7253 | 16.09.1996 | B.E. MBA | சுவாதி | —— | —— |
| 14 | G 7254 | 31.01.2003 | B.A. | உத்திராடம் | —— | —— |
| 15 | G 7255 | 20.08.1996 | B.Tech. | சுவாதி | Private Sector | —— |
| 16 | G 7256 | 23.03.2001 | B.B.A. MBA | பூரட்டாதி | Studying | —— |
| 17 | G 7257 | 30.06.1999 | B.Com. | உத்திராடம் | —— | —— |
| 18 | G 7258 | 18.11.1997 | M.B.B.S. | புனர்பூசம் | Doctor | Rs.50,000/- PM Stipend |
| 19 | G 7259 | 12.09.1999 | ICMA | சித்திரை | Private Sector | Rs.30,000/- PM |
| 20 | G 7260 | 05.05.1998 | B.Tech. PGDM | மகம் | H.R.F | Rs.6 Lakhs / PA |
| 21 | G 7261 | 17.10.1993 | B.E. | விசாகம் | Private Sector | Rs.50,000/- PM |
| 22 | G 7262 | 01.03.1985 | M.B.A. | மகம் | —— | —— |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 23 | G 7263 | 18.03.1994 | B.E. | கார்த்திகை | Analyst | Rs.10 Lakhs / PA |
| 24 | G 7264 | 02.12.1997 | M.Com. CA | மூலம் | —— | —— |
| 25 | G 7265 | 12.01.2001 | B.Tech. | ஆயில்யம் | Software Engineer | Rs. 4 Lakhs / PA |
| 26 | G 7266 | 18.09.1999 | M.Sc. | மூலம் | DS Engineer | Rs.6 Lakhs / PA |
| 27 | G 7267 | 21.10.2000 | BCA | ஆயில்யம் | Medical Coder | Rs.31,000/- PM |
| 28 | G 7268 | 29.11.1990 | B.E. MS | அஸ்வினி | USA | Rs.12 Lakhs / PM |
| 29 | G 7269 | 04.12.1995 | B.E. B.Tech. | அஸ்வினி | Private Sector | Rs.20 Lakhs / PA |
| 30 | G 7270 | 16.09.1997 | M.Sc., | பூரட்டாதி | Clinical Research Lab | Rs.35,000/- PM |
| 31 | G 7271 | 16.07.1997 | B.E. | அனுஷம் | Senior Testing Engineer | Rs.6-7 Lakhs / PA |
| 32 | G 7272 (Divorcee) | 21.03.1983 | MBA | ரோகிணி | Infosys | Rs.40,000/- PM |
| 33 | G 7273 | 10.06.1997 | BPT, M.Sc. | ஆயில்யம் | U.K. | 1500 GBP / PM |
| 34 | G 7274 | 08.05.1996 | B.Sc., | பூராடம் | —— | —— |
| 35 | G 7275 | 15.12.2000 | B.E. M.Sc. | ஆயில்யம் | —— | —— |
| 36 | G 7276 | 17.02.1997 | M.A. B.Ed., | திருவாதிரை | Associate Editor | Rs.5-6 Lakhs / PA |
| 37 | G 7277 | 21.05.1994 | M.B.B.S. MS | உத்திரம் | Assistant Professor | Rs.1.10 Lakhs / PM |


KRT CAREER ACADEMY
Leads you towards success!!!
(A unit of OPR Memorial Charitable Trust, Chennai)



FREE COACHING
FOR UPSC,TNPSC,SSC,TNUSRB
TNPSC, SSC NEW BATCH STARTS FROM MARCH ONWARDS 2024
OPR MEMORIAL CHARITABLE TRUST
KRT Building, No.34-A, Gangai Amman Koil Street,
Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : krtacademy2020@gmail.com
www.krtacademy.com
+91 96888 77722
KRT CAREER ACADEMY




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்



எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 10841 (Divorcee) | 28.07.1993 | B.E. MBA | அனுஷம் | Caterpillar | Rs.18 Lakhs / PA |
| 2 | B 10842 | 06.09.1994 | B.E. | உத்திரம் | Software Analyst | Rs. 8 Lakhs / PA |
| 3 | B 10843 | 02.03.1994 | B.E. | சுவாதி | Singapore | Rs.50 Lakhs / PA |
| 4 | B 10844 | 18.05.1997 | B.Sc. | அஸ்தம் | Own Business | Rs.2 Lakhs / PM |
| 5 | B 10845 | 06.10.1993 | DEEE | ரோகிணி | Private Sector | Rs.3 Lakhs / PA |
| 6 | B 10846 | 06.11.1994 | B.E. | மூலம் | Senior Consultant | Rs.1 Lakh / PM |
| 7 | B 10847 | 16.02.2002 | MBBS | ரேவதி | Doctor | —- |
| 8 | B 10848 | 14.02.1998 | MBA | உத்திரம் | Assistant Manager | Rs.10 Lakhs / PA |
| 9 | B 10849 | 09.10.1996 | B.Tech. MS | பூரம் | USA | Rs.68 Lakhs / PA |
| 10 | B 10850 | 02.11.1996 | B.Sc. | பூசம் | General Insurance Company | Rs.40,000/- PM |
| 11 | B 10851 | 27.10.1992 | B.E. | விசாகம் | Manager-Bluedart | Rs.75,000/- PM |
| 12 | B 10852 | 07.06.1991 | B.Sc. | உத்திரட்டாதி | Own Business | Rs.70,000/- PM |
| 13 | B 10853 | 22.05.1993 | B.Tech. | ரோகிணி | USA | Rs.15 Lakhs / PA |
| 14 | B 10854 | 08.09.1980 | M.E. | மகம் | Own Business | Rs.40,000/- PM |
| 15 | B 10855 | 13.04.1990 | DCE | அனுஷம் | Project Manager | Rs.60,000/- PM |
| 16 | B 10856 | 07.08.1990 | B.Tech. MS | அவிட்டம் | USA | Rs.70 Lakhs / PA |
| 17 | B 10857 | 19.02.1994 | B.E. LLB. | ரோகிணி | Advocate | Rs. 1 Lakh / PM |
| 18 | B 10858 | 06.05.1997 | B.E. | பரணி | Software Engineer | Rs.14 Lakhs / PA |
| 19 | B 10859 | 12.08.1995 | B.E. MS. | சதயம் | UK | Rs.4.5 Lakhs / PM |
| 20 | B 10860 | 02.12.1992 | B.E. | சதயம் | Own Business | Rs.50-90,000/- PM |
| 21 | B 10861 | 06.09.1992 | B.E. MS | பூராடம் | USA | 1.90 Dollars / PA |
| 22 | B 10862 | 09.02.1994 | B.E. | திருவோணம் | Senior Software Quality Analyst | Rs.9,50 Lakhs / PA |
| 23 | B 10863 | 10.08.1993 | DME | பரணி | Supervisor | Rs.28,000/- PM |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 24 | B 10864 | 25.07.1995 | B.E. | திருவாதிரை | Software Engineer | Rs.9 Lakhs / PA |
| 25 | B 10865 | 10.08.1995 | B.E. | திருவோணம் | Senior Engineer | Rs.7.3 Lakhs / PA |
| 26 | B 10866 | 17.04.1998 | B.E. M.Tech. | மூலம் | Private Sector | Rs.8-9 Lakhs / PA |
| 27 | B 10867 | 18.12.1991 | DME | ரோகிணி | Senior Supervisor | Rs.45,000/- PM |
| 28 | B 10868 | 19.08.1991 | B.E. | கேட்டை | Assistant Manager | Rs.60,000/- PM |
| 29 | B 10869 | 06.10.1993 | MCA | மிருகசீரிஷம் | Full Stock Developer | Rs.1.7 Lakhs / PM |
| 30 | B 10870 | 24.10.1991 | B.Tech. | பரணி | Lucas TVS | Rs.50,000/- PM |
| 31 | B 10871 | 10.09.1994 | B.B.A. | விசாகம் | Own Business | Rs.1 Lakh / PM |
| 32 | B 10872 | 28.05.1992 | B.E. | ரேவதி | Network Engineer | Rs.7.5 Lakhs / PA |
| 33 | B 10873 | 26.11.1995 | M.B.B.S. MD | பூராடம் | Doctor | Rs.1,10,000/- PM |
| 34 | B 10874 | 26.10.1991 | B.Tech. PGDM | ரோகிணி | HSBC Bank | Rs.15 Lakhs / PA |
| 35 | B 10875 | 04.03.1981 | Dip. IT | திருவோணம் | Call Driver | Rs.40,000/- PM |
| 36 | B 10876 | 03.09.1998 | B.Com. MBA | உத்திராடம் | Senior Consultant | Rs.8.5 Lakhs / PA |
| 37 | B 10877 | 20.11.1993 | B.E. | திருவோணம் | Accenture | Rs. 17 Lakhs / PA |
| 38 | B 10878 | 02.06.1993 | B.E. | விசாகம் | Kone Elevator | Rs.88,000/- PM |
| 39 | B 10879 | 22.08.1994 | B.E. | சித்திரை | TCS Software Engineer | Rs.11 Lakhs / PA |
| 40 | B 10880 | 14.12.1986 | MBA | கிருத்திகை | Supervisor | Rs.20,000/- PM |
| 41 | B 10881 | 31.07.1997 | B.E. | திருவாதிரை | Software Developer | Rs.19 Lakhs / PM |
| 42 | B 10882 | 20.08.1987 | B.E. | புனர்பூசம் | Arab Bank, Dubai | Rs.5 Lakhs / PM |
| 43 | B 10883 | 26.10.1993 | DECE. B.Com. | சதயம் | Business | Rs.60,000/- PM |
| 44 | B 10884 | 22.12.1992 | M.B.B.S. MS | அனுஷம் | Doctor | Rs.11 Lakhs / PA |
| 45 | B 10885 | 02.10.1994 | M.S. | மகம் | Germany | Rs.4 Lakhs / PM |
| 46 | B 10886 | 17.09.1993 | M.E. | அஸ்தம் | Hitachi Energy | Rs.10 Lakhs / PA |
| 47 | B 10887 (Divorcee) | 08.11.1983 | B.E. MS | கேட்டை | USA | Rs.1 Crore / PA |
| 48 | B 10888 | 05.07.1996 | B.E. MBA | சதயம் | Sales Developer | Rs.40,000/- PM |
| 49 | B 10889 | 26.12.1992 | M.B.B.S. MD | உத்திராடம் | Doctor | Rs.1.2 Lakhs / PM |
| 50 | B 10890 | 12.10.1989 | M.B.B.S. | பூரட்டாதி | Apollo Hospital | Rs.60,000/- PM |

# சென்னையில் நடைபெற்ற ஓ.பி.ஆர் 129வது பிறந்தநாள் விழாவின் நிகழ்வுகள்







REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : D.MUTHURAMAN.